திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு

உ

சிவசிவ

செந்திலாண்டவன் துணை

CONNEMARA PUBLIC LIBRARY
4 - APR 1957
MADRAS

# காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

பிரபந்தங்கள் என்கின்ற

# அம்மையார் திருமுறை

[ குறிப்புரையுடன் ]

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

**காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்கள் திருவுளப்பாங்கின்படி

★

ஸ்ரீ காசிமடத்து இளவரசு

**ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களால் வெளியிடப்பெற்றது

★

துன்முக ஆண்டு வைகாசித் திங்கள் 14-ஆம் நாள்

ஸ்ரீ காசிமடம் 1956 திருப்பனந்தாள்

முதற் பதிப்பு—1956

4 - APR 1957
MADRAS

உ

சிவசிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

# அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் நிறுவிய தருமங்கள்

| எண். | தரும விவரம் | மூலதனம் ரூபாய் |
|---|---|---|
| 1. | திருமுறை வளர்ச்சிக்கு ஆக 24 தருமங்கள் ... | 3,29.000 |
| 2. | கல்வி அபிவிருத்திக்கு ஆக 45 ,, ... | 5,77,700 |
| 3. | சைவசித்தாந்தம் பரப்ப 7 ,, ... | 1,56,000 |
| 4. | அன்னதானம் செய்ய 83 ,, ... | 19,43,500 |
| 5. | வைத்தியம் செய்ய 5 ,, ... | 1,22,500 |
| 6. | பொது தருமங்கள் — ஸ்நான கட்டம் அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப்பரிசு, கல்லெழுத்து முதலியன 48 தருமங்கள் ... | 4,86,245 |
| | ஆகத் தருமங்கள் 212-க்கு ... | 36,14,945 |

...RA PUBLIC ...
4-APR ...57
MADRAS

உ

சிவசிவ...

# முன்னுரை

*மடுத்தபுனல் வேணியினர் அம்மையென மதுரமொழி*
*கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்திலவர்*
*எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றுமிருக் கின்றாரை*
*அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவா யினதம்மா!*

— பெரிய புராணம்

திருவாலங்காடு தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று; நீலி என்பாளின் வஞ்சனையினால் ஒரு வணிகன் உயிரிழந்தானாக அவ்வணிகனுக்கு அளித்த வாக்கின்படி எழுபது வேளாளர்கள் எரியில் மூழ்கிய பழையனூரோடு சேர்த்துப் **பழையனூர் ஆலங்காடு** எனப் பெறுவது; பஞ்ச சபைகளுள் **இரத்தின சபை** யாக விளங்குவது; "அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் பதி" ஆகையால் சம்பந்தர் மிதிக்க அஞ்சிய மேன்மையுடையது; "நம்மை அயர்ந்தனையோ பாடுதற்கு" என்று இறைவர் கனவில் அருள் செய்யச் சம்பந்தரால் "**துஞ்சவருவாரும்**" என்ற திருப்பதிகம் பாடப்பெற்ற சிறப்புடையது; "நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க வேண்டும்" என்று விண்ணப்பித்த காரைக்கால் அம்மையார்க்கு. "ஆலங்காட்டில் ஆடுமா நடமும் நீ கண்டானந்தஞ் சேர்ந்தெப்போதும் பாடுவாய் நம்மை" என்று இறைவர் அருள் செய்ய, அம்மையார், "என்றும் இருக்கின்ற" பெருமை யுடையது. எற்புடம்புடன் அம்மையார் இருக்கின்ற காட்சியைக்காட்டும் செப்புத் திருவுருவம் திருவாலங்காட்டில் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் நிலையில் இருப்பதை இன்றும் காணலாம். அதன் நிழற்படம் இந்நூலில்இணைக்கப்பெற்றுள்ளது.

காரைக்கால் அம்மையாரைப் "**பேயார்**" என்று சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். அம்மையாரும் தாம் பாடிய பதிகங்களிலும் தம்மை, '**காரைக்காற்பேய்**' என்றே குறித்துள்ளார். **புனிதவதியார்** என்பதே அம்மையாரின் இயற் பெயர். அம்மையார் பேய் வடிவு வேண்டிப் பெற்றுக் கயிலைநோக்கித் தலை

யாலே நடந்து செல்லுகையில் பாடிய முதல் நூல் "**அற்புதத் திருவந்தாதி**"யாகும்; "பொற்புடைச் செய்ய பாதபுண்டரீகங்கள் போற்றும் நற்கணத்தினில் ஒன்றுனேன் நான்" என்று விரும்பிப் பாடியது இந்நூல் என்பார் சேக்கிழார்; இந்நூல் 86-ஆம் பாடல் இதனையே உணர்த்துகின்றது. அடுத்து அம்மையார் பாடியருளிய நூல் "**திருவிரட்டைமணி மாலை**" ஆகும்; சேக்கிழார் சுவாமிகள், "ஆய்ந்தசீர் இரட்டை மாலையந்தாதி" என்று இந்நூலைக் குறிப்பிடுவார். '**ஆய்ந்தசீர்**' என்றமையால், இறைவனது சீர்களைப் பாடும் பொருண்மையுடையது இந்நூல் என்பது போதரும். அம்மையார் கயிலைக்குச் சென்று, திருவாலங்காட்டுக்கு இறைவனதாணையால் எழுந்தருளிப் பாடிய பதிகங்களே இரண்டு மூத்த திருப்பதிகங்களாம். இந் நான்கு நூல்களும் **11-ஆம் திருமுறையிற்** சேர்க்கப்பெற்றுள்ளன. இந்நான்கையும் சைவப் பெருமக்கள் ஓதிப் பயனடையவேண்டும் என்ற நோக்கத்தோடு, "**அம்மையார் திருமுறை**" என்ற பெயருடன், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** திருவுளப்பாங்கின்படி **ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் 268-ஆம் ஆண்டு நினைவு மலராக** வெளியிடப்பெறுகின்றது.

இவ் வெளியீடு நன்கு அமையச் சிறு குறிப்புக்கள் எழுதி உறுதுணை புரிந்த திருச்சி வித்துவான் **திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்களுக்கும், ஏனைய அன்பர்களுக்கும் செந்திலாண்டவன் திருவருள் துணை செய்க.

இந்நூலை வெளியிடும் பணியினை அடியேற்கருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின்** திருவடிக் கமலங்களை அடியவன் சிரத்திற் கணியெனக்கொண்டு வந்தித்து வழிபடுகின்றேன்.

"வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே எப்போதும் ஓது"

— அற்புதத் திருவந்தாதி (73)

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
27—5—'56

இங்ஙனம்,
**மகாலிங்கத் தம்பிரான்,**
இளவரசு.

...NEJARA PUBLIC LIBRARY
4 - APR. .57



# அம்மையார் வரலாறு

சோழவள நாட்டிலே காரைக்கால் என்னும் பதியிலே தனதத்தன் என்னும் வணிகனின் அருந்தவப் புதல்வியாக அவதரித்தவர் **காரைக்காலம்மையார்**. இவர் புனிதவதியார் என்ற பிள்ளைத் திருநாமம் கொண்டவர்; இளமையில் சிறுமியருடன் விளையாடும்போதெல்லாம் அன்போடு சிவபெருமான் திருப்பெயரையே பயின்று வந்தார்; சிவனடியார்களிடத்தும் அன்பு பூண்டு ஒழுகி வந்தார்; நாகைப்பட்டினத்துப் பரமதத்தன் என்னும் வணிகனுக்கு மணஞ் செய்விக்கப்பெற்று காரைக்காலிலேயே இருந்து இல்லறம் நடத்தி வந்தார்.

ஒருநாள் பரமதத்தன், தன் அன்பர்களால் கொடுக்கப் பெற்ற இரண்டு மாங்கனிகளை வீட்டிற்கு அனுப்பினான். அச்சமயம் மிகுந்த பசியுடன் வந்த சிவனடியார்க்குப் புனிதவதியார், கணவன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை வைத்து அமுது படைத்து உபசரித்து அனுப்பினார்: பின்னர் பரமதத்தன் வீட்டிற்கு வரவும் அவனுக்கு மற்றொரு மாங்கனியை வைத்து உணவு படைத்தார். மாங்கனியின் சுவையில் திளைத்த வணிகன் மற்றொரு கனியையும் கேட்க, அம்மையார் திகைத்து அங்கு நின்றும் நீங்கி ஓர் பால் நின்று இறைவனை வேண்டி அவன் அருளால் **அதிமதுரக்கனி** ஒன்றைப் பெற்றுக்கொணர்ந்து இடவும், அக்கனி மற்றையதைக் காட்டிலும் சுவைமிகுந்து விளங்கப் பரமதத்தன் அதிசயித்து, "இது நான் அனுப்பிய கனி அன்று; இஃது உனக்கு ஏது" என்று கேட்க, அம்மையார் நிகழ்ந்தது கூறி, "ஈசன் அருளே கனி அளித்தது" என்றார். பரமதத்தனோ உண்மை தெளியாதவனாய், "இன்னும் ஒரு கனி அவனருளால் வரவழைத்துத் தருக" என்றபோது அம்மையார் இறைவன் திருவருளால் மீண்டும் ஒரு கனியைத் தருவித்துக் கொடுத்தார். வணிகன் அதனைக் கண்டு அதிசயிக்கக் கனி மறைந்தது.

இவ்வதிசயத்தைக் கண்ட பரமதத்தன் அதுமுதல் புனிதவதியாரைத் தெய்வமாகக் கருதினான்; தனித்துவாழத் துணிவு பூண்டு வியாபார நிமித்தம் செல்வான்போன்று பாண்டி நாட்டுக் கடற்கரைப் பட்டினம் ஒன்றை அடைந்து, அங்கு

வணிகர் குலப் பெண் ஒருத்தியை மணந்து, அவள்பால் தோன்றிய பெண் மகவுக்குத் தான் வழிபடும் தெய்வமாகக் கருதிய புனிதவதியாரின் திருப்பெயரையே இட்டு வாழ்ந்துவர லானான்.

பரமதத்தன் பாண்டி நாட்டில் இருப்பதை அறிந்த அம்மையாரின் உறவினர், அம்மையாரைப் பரமதத்தன்பால் அழைத்துச் சென்றனர். அம்மையாரின் வருகையை அறிந்த பரமதத்தன் தன் குடும்பத்துடன் சென்று அவரை வணங்கி வரவேற்று நின்றான். சுற்றத்தார் ஐயுற்று வினவ, பரமதத்தன் அம்மையாரின் தெய்வீகத் தன்மையை விளக்கி அவர்களையும் பணியுமாறு பணித்தனன். அப்போது தன் கணவன் நிலை யறிந்த புனிதவதியார், அதுவரை அவனுக்காகத் தாங்கி நின்ற உடம்பின் தசைகளையெல்லாம் இறைவனை வேண்டி அவன் அருளால் உதறிவிட்டு எலும்போடு கூடிய உடலுடன் பேய் வடிவம் எடுத்துத் தமக்குண்டான ஒருமை ஞானத்தினாலே "அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணி மாலை" என்னும் பிரபந்தங்களைப் பாடிப் பேருணர்வு பெற்றுத் திருக்கயிலைமலை சென்றடையும் கருத்துடன் அங்குத் தலையாலே நடந்து சென்றார்.

திருக்கயிலையை அடைந்த அம்மையைச் சிவபெருமான் '**அம்மையே!**' என்று அழைக்க, அது கேட்ட அம்மையார் '**அப்பா!**' என்று அலறித் திருவடியில் **வீழ்ந்து** வணங்கி, "எக் காலத்தும் மாறாத இன்ப அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்; நீ ஆடும்போது நான் மகிழ்ந்து பாடிக்கொண்டு உன் அடிக்கீழ் இருத்தல் வேண்டும்" என்று வேண்டி நின்றனர். பின்னர் இறைவன் திருவருளின்படி திருவாலங் காட்டினை அடைந்து அண்டமுற நிமிர்ந்தாடும் ஐயன் திருக் கோலத்தைக் கண்டு தரிசித்து மூத்த திருப்பதிகங்கள் பாடி யருளி ஒரு பங்குனிச் சுவாதியில் பேரின்பநிலையை அடைந்தார்.

பேயார் என்னும் காரைக்காலம்மையார் காலம் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டது என்றும், கி. பி. 300—600 இவற்றுக்கு உட்பட்டது என்றும் கூறுவர்.

CONNEMARA PUBLIC LIBRARY
4 - APR 1957
MADRAS

உ

சிவசிவ

# காரைக்காலம்மையார் துதி

---

நம்பன் திருமலை நான்மிதி
யேன்என்று தாள்இரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்(து)
ஏற உமைநகலும்
செம்பொன் உருவன்என் **அம்மை**
எனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பின் உகுகாரைக் காலினின்
மேய குலதனமே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

நோற்ற மில்பரஞ் சோதிதன் வாய்திறந்(து)
ஆற்ற அன்புடன் **அம்மையே** என்னுமோர்
பேற்றை முன்பெறப் பேயுரு வெய்திய
சாற்ற ரும்புகழ்த் தாயை வணங்குவாம்.

— சீகாளத்தி புராணம்

ஓதாமல் பலகலையும் உணர்ந்தொளிரும்
சிவஞான வுருவ மாகிப்
போதாருங் கயிலையரன் **அம்மைவா**
என**அப்பா** புகுந்தேன் என்று
தாதாரும் மலர்க்கரத்துச் சதிக்கிசையப்
பாணிதிருத் தாளம் ஏந்தும்
வாதாடும் பிரானடிக்கீழ்க் **காரைக்கால்**
**அம்மை**பதம் வணங்கி வாழ்வாம்.

— திருவாலங்காட்டுப் புராணம்

---

... PUBLIC LIBRA...
4 - APR 1957
MADRAS

உ

சிவசிவ

# அருள் பெறும் வழி

ஒழித்தி டும்பவப் பகைவிரைந்(து)
உள்ளமே! ஒருமு துணர்வோர்முன்
பழிச்சு பாடலை : அரற்(கு)அவை
விடர்க்(கு)இளம் பாவையர் உரைபோலும் :
கழித்தி டேல்உப சாரமென்(று)
இதனைநீ கட்டுரை எனக்கொள்வாய் ;
விழித்து மாரனை எரித்ததே
அருள்பெறும் விருப்பினர் விருப்(பு)ஊதே.

— வைராக்கிய சதகம்

CONNEMARA PUBLIC LIBRARY
4 - APR 1957
MADRAS

CONNEMARA PUBLIC LIBR...
4-APR 1957
MADRAS




அண்டமுற நிமிர்ந்தாடும் ஐயன் வாழ்க!

PUBLIC LIBRARY
4 - APR 1957

உ
சிவசிவ
செந்திலாண்டவன் துணை

## காரைக்காலம்மையார்
அருளிச்செய்த
## பிரபந்தங்கள் என்கின்ற
# அம்மையார் திருமுறை

### 1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் *

*பண் - நட்டபாடை [ 11-ஆம் திருமுறை ]*

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் **எங்கள்**
**அப்பன் இடம்திரு வாலங் காடே.** 1

கள்ளிக் கவட்டிடைக் காலை நீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்து மையை
விள்ள எழுதி வெடுவெ டென்ன
நக்கு வெருண்டு விலங்கு பார்த்துத்

---

* மூத்த திருப்பதிகம் — இது, பதிகம் என்னும் அமைப்பில் வரும் அருட்பாக்களுக்கெல்லாம் காலத்தால் முதலிற் பாடப்பெற்ற பதிகம் ஆகும். காரைக்காலம்மையார் திருக்கயிலையினின்றும் பேய்வடிவுடன் இறைவன் ஆணையின்படி திருவாலங்காட்டினை அடைந்தபோது அங்குத் தாம் கண்ட காட்சியின் நிலையை உள்ளவாறே பாடியருளிய இப் பதிகம் அத்தலத்தைப்பற்றியதாகும்.

1. திரங்கி - தளர்ந்து. குண்டு - ஆழ்ந்த. குழி - குழிந்த. பங்கி - தலைமயிர். பரடு - கணுக்கால். உலறுதல் - வற்றுதல். வீசி - நிரம்பி. அங்கம் - உடல். எங்கள் அப்பன் - எங்கள் இறைவன். திருவாலங்காடு இடம் என்க.

துள்ளிச் சுடலைச் சுடுபிணத்தீச்
சுட்டிட முற்றுஞ் சுளிந்து பூழ்தி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 2

வாகை விரிந்துவெண் ணெற்(று)ஒ லிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையொ(டு) ஆண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித் தோட வீசி
ஈகை படர்தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்ட கத்தே
ஆகங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 3

குண்டிலோ மக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன அதனை முன்னே
கண்டிலோம் என்று கனன்று பேய்கள்
கையடித் தோடிடு காட ரங்கா
மண்டலம் நின்றங்(கு) உளாளம் இட்டு
வாதித்து வீசி எடுத்த பாதம்
அண்டம் உறநிமிர்ந் தாடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 4

---

2. கள்ளி - கள்ளி மரம். கள்ளிக் கவடு - கள்ளி மரக்கிளை. கொள்ளி - கொள்ளிக்கட்டை. மசித்து - குழைத்து; அரைத்து, மை - கண் மை. நக்கு - சிரித்து. விலங்கு பார்த்து - குறுக்கே நோக்கி. சுடலை - சுடுகாடு. பூழ்தி - புழுதி.

3. வாகை - பாலை நிலத்திற்குரிய ஒரு வகை மரம். வெண் நெற்று - வெண்ணிறமாக முற்றிய காய்கள். ஒலிப்ப - காற்றில் சலசலவென்று ஒலிக்க. நடு நாள் - நள்ளிரவு. கூகை - கோட்டான். ஆண்டலை-மனிதனின் தலைபோன்ற தலையுடைய ஒருவகைப் பறவை. கோடு - மரக் கொம்பு. ஈகை படர் - இண்டைக் கொடி படர்ந்து. ஈமம் - விறகு அடுக்கு. இடு - இட்ட. ஆகம் - மனம்.

4. குண்டில் - ஆழமான; வட்டமான. ஓமக்குழி - ஓமகுண்டம். குறு நரி - சிறு நரி. கனன்று-கோபங்கொண்டு. கை அடித்து-கைகொட்டி. அரங்கு ஆ(க) - நாடக சபையாக. மண்டலம் நின்று - வட்டமாகச்

விழுது நிணத்தை விழுங்கி யிட்டு
வெண்டலை மாலை விரவப் பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளி என்று
பேரிட்டுச் சீருடைத் தாவ ளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொ டுத்துப்
போயின தாயை வரவு காணு(து)
அழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்
**அப்பன் இடம்திரு வாலங் காடே.** 5

பட்டடி நெட்டுகிர்ப் பாறு காற்பேய்
பருந்தொடு கூகை பகண்டை ஆந்தை
குட்டி யிடமுட்டை கூகை பேய்கள்
குறுநரி சென்றணங் காடு காட்டிற்
பிட்டடித் துப்புறங் காட்டில் இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே
அட்டமே பாயநின் றாடும் **எங்கள்**
**அப்பன் இடம்திரு வாலங் காடே.** 6

சுழலும் அழல்விழிக் கொள்ளி வாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடி ஆடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான்தடி தின்(று)அணங் காடு காட்டிற்

---

சூழ்ந்து நின்று, உள்ளாளம் இடுதல்:- வளைந்து சுற்றி ஓடி வருதல் ; ஒரு. வகைப் பாட்டுப் பாடுதலுமாம், வாதித்து - மாறி வந்து.

5. விழுது நிணம் - நெய்ப்பசை நிரம்பிய மாமிசம். வெண்டலை - வெள்ளிய தலையோடு, கழுது - இங்குப் பெண் பேய், காளி-காளிகா தேவி. தாயை - தாய்ப் பேயின். உறங்கும் - தூங்குகின்ற. புறங்காடு - சுடுகாடு.

6: பட்டடி - தட்டையான அடி, நெட்டு உகிர் - நீண்ட நகம். பாறுகால் - பருத்தின் கால் போன்ற. கால். பகண்டை-கௌதாரி. அணங் காடுதல் - தெய்வங்கொண்டாற்போல் ஆடுதல். பிட்டடித்து- பிசைந்தமா அப்பி: பிய்த்தெறிந்து எனினுமாம். பேர - பெயர ; நிலைகுலைய. புரட்டி ஆங்கே - புரட்டியிடும் அவ்விடத்து. அட்டமே பாய-எட்டுத் திசையிலும் பாய்ந்து ; குறுக்காக எனினுமாம்.

7. அழல் விழி - நெருப்புப்போன்ற சிவந்த கண். கொள்ளி வாய்ப் பேய் - ஒரு வகைப் பேய். துணங்கை - ஒரு வகைக் கூத்து, தடி - மாமிசம்.

கழலொலி ஓசைச் சிலம்பொ லிப்பக்
காலுயர் வட்டணை இட்டு நட்டம்
அழலுமிழ்ந் தோரி கதிக்க ஆடும்
**அப்பன் இடம்திரு வாலங் காடே.** 7

நாடும் நகரும் திரிந்து சென்று
நன்னெறி நாடி நயந்த வரை
மூடி முதுபிணத் திட்ட மாடே
முன்னிய பேய்க்கணம் சூழச் சூழக்
காடுங் கடலும் மலையும் மண்ணும்
விண்ணுஞ் சுழல அனல்கை யேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
**அப்பன் இடம்திரு வாலங் காடே.** 8

துத்தங்கைக் கிள்ளை விளரி தாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதந் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கை மென்றோல்
தமருகங் குடமுழா மொந்தை வாசித்(து)
அத்தனை விரவினோ டாடும் எங்கள்
**அப்பன் இடம்திரு வாலங் காடே.** 9

---

வட்டணை இட்டு - தாளமிட்டு. நட்டம் - நடனம். ஓரி - கிழ நரி, கதிக்க- ஆடி நடக்க.

8. நன்னெறி நாடி - நல்வழியைத் தேடி. நயந்தவரை - விரும்பி இறந்தவர்களை. மூடி - சூழ்ந்து. முதுபிணத்திட்டமாடே - கிழப்பிண மிட்ட பக்கத்திலே. முன்னிய - அணுகிய. காடும் கடலும் மலையும் மண்ணும் விண்ணும் சுழல என்றது இறைவன் அண்டமுற நிமிர்ந்தாடும் குறிப்பினைத் தருவது. அரவப் புயங்கன் - நாகாபரணனாகிய சிவ பெருமான்.

9. துத்தம், கைக்கிள்ளை, விளரி, தாரம், உழை, இளி, ஓசை - இவை ஏழிசைகள். கைக்கிள்ளை - கைக்கிளை. பண் - இசையமைதி. தகுணிதம் - ஒரு வகை வாத்தியம். கரடிகை - ஒரு வகைப்பறை. வன்கை - வைராக்கியமுள்ள (மிருகத்தின்). தமருகம் - உடுக்கை. சச்சரி........ மொந்தை - இவை வாத்தியங்களின் வகைகள். அத்தனை விரவினோடு - அவ்வளவு வகையும் பொருந்தி இருக்கும் தன்மையுடன்.

புந்தி கலங்கி மதிம யங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இட்ட செந்தீ விளக்கா
முந்தி அமரர் முழவின் ஓசை
திசைகது வச்சிலம்(பு) ஆர்க்க ஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 10

ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி
ஒன்றினை ஒன்றடித்(து) ஒக்க லித்துப்
பப்பினை இட்டுப் பகண்டை பாடப்
பாடிருந்(து) அந்நரி யாழ மைப்ப
அப்பனை அணிதிரு வாலங் காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக் காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்து வாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. புந்தி - மனம், மதி - அறிவு. புறங்காட்டில் இட்டுச் சந்தியில் வைத்துக் கடமை செய்து - சுடுகாட்டில் ஈமப் புறத்தின் புறத்தே பிணத்தை வைத்து உடலைப் பற்றிய கிரியை செய்து; ஈமக்கிரியை புரிந்து. தக்கவர் - ஈமக்கிரியை புரியும் உரிமையாளர். இட்ட செந்தீ - கொள்ளி' கதுவ - நிறைய. அந்தி - மாலைக் காலம்.

11. ஒப்பனை இல்லவன் - உவமை இல்லாதவன்; சிவபெருமான். ஒக்கலித்து - களிப்பினால் ஆரவாரித்து. பப்பினை இட்டு - பெருங்குரலிட்டு. நரியாழ் அமைப்ப - (பகண்டை பாடுதலுக்கு ஏற்ப) நரி கூவுதல் யாழ் வாசித்தல்போல் ஒலிக்க. செடி தலை - முடிக்கப்பெறாமல் செடிபோல விரிந்த மயிரையுடைய தலை. காரைக்காற் பேய் - காரைக்காலம்மையார்.

## 2. மூத்த திருப்பதிகம் *

**பண்—இந்தளம் [11-ஆம் திருமுறை]**

திருச்சிற்றம்பலம்

எட்டி இலவம் ஈகை
    சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த
    கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த
    காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவம் கூளி
    பாடக் **குழகன் ஆடுமே.** 1

நிணந்தான் உருகி நிலந்தான்
    நனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை எறிந்து சூழும்
    நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள்
    மாந்திக் களித்த **மனத்தவாய்**
அணங்கு காட்டில் அனல்கை
    ஏந்தி **அழகன் ஆடுமே.** 2

புட்கள் பொதுத்த புலால்வெண்
    டலையைப் புறமே நரிகவ்வ
அட்கென்(று) அழைப்ப ஆந்தை
    வீச அருகே சிறுகூகை

---

* இத் திருப்பதிகம் திருவாலங்காட்டில் இறைவன் ஆடியருளிய திருநடனத்தைப்பற்றியதாகும்.

1. எட்டி - ஒரு வகை மரம். ஈகை - இண்டங்கொடி. குடர் கௌவப்பட்ட பிணங்கள் - கழுகுகளால் குடர் கௌவப்பட்ட பிணங்கள். பறைபோல் - வட்ட வடிவமான பறைபோல். பேய்முழவங்கொட்ட கூளி பாட என்க. கூளி - ஒருவகைப் பேய். குழகன் - சிவபெருமான்.

2. நிணம் தான் உருகி - தசையின் கொழுப்பு தீயினால் உருகி. துணங்கை எறிந்து - துணங்கைக் கூத்து ஆடி. சூழும் - சுற்றிலும். சுடலை

உட்க விழிக்க ஊமன்
　　வெருட்ட ஓரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணும்
　　**இறைவன் பெயரும் பெருங்காடே.** 3

செத்த பிணத்தைத் தெளியா(து)
　　ஒருபேய் சென்று விரல்சுட்டிக்
கத்தி உறுமிக் கனல்விட்(டு)
　　எறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க
　　மோதிப் பலபேய் இரிந்தோடப்
பித்த வேடங் கொண்டு
　　நட்டம் **பெருமான் ஆடுமே.** 4

முள்ளி தீந்து முளரி
　　கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில்
　　பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோலொன்(று)
　　உடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி இடமும் அதுவே
　　ஆகப் **பரமன் ஆடுமே.** 5

---

நவிழ்த்து - ஈமத்தியை அவித்து. கணங்கள் - பேய்க்கணங்கள். மாந்தி - தின்று. அணங்கு - தெய்வத்தன்மை பொருந்திய. காட்டில்-சுடுகாட்டில். அழகன் - சிவபெருமான்.

3. பொதுத்த - (கொத்தி த்தின்னுதலால்) துளைசெய்த. புலால்:- மாமிசம் பொருந்திய. அட்கென்று - இஃது ஒலிக்குறிப்பு. உட்க - அஞ்ச. சிறு கூகை - சிறுகோட்டான். ஊமன் - கோட்டான். ஓரி - நரி. கதித்து - பெருங்குரலிட்டு. பிட்க - கத்த. பேணும் - விரும்பும். பெயரும் - ஆடும்.

4. செத்த பிணத்தை - இறந்தாரது உடலை. தெளியாது - செத்தது என்று தெளியாது. விரல் சுட்டி - விரலை நீட்டிக் குறித்துக் காட்டி. பத்தல் வயிற்றை - ஒட்டி உலர்ந்து உள் வற்றிய வயிற்றை. மோதி - அடித்து. இரிந்து ஓட - பயந்து ஓட. பித்த வேடம் - பைத்திய வேஷம்.

5. முள்ளி - வேல் முதலிய முள் மரம். முளரி - முட்செடி. மூளை - மண்டையிலுள்ள மாமிசப் பகுதி. உக்கு - உதிர்ந்து. கள்ளி வயிற்றில் -

வானைக் கிளர வளைவாள்
எயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும்
விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல்
மயிர்க்கட் டழல்வாய் அழல்கட்பேய்
கூளிக் கணங்கள் குழலோ(டு)
இயம்பக் குழகன் ஆடுமே. 6

நொந்திக் கிடந்த சுடலை
தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்(து)அங் குறங்குஞ்
சிறுபேய் சிரமப் படுகாட்டின்
முந்தி அமரர் முழவின்
ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை
ஏந்தி அழகன் ஆடுமே. 7

வேய்கள் ஓங்கி வெண்முத்(து)
உதிர வெடிகொள் சுடலையுள்
ஓயும் உருவில் உலறு
கூந்தல் அலறு பகுவாய

---

கள்ளி மரத்தில், வெள்ளில் - விளா மரம். பிறங்கு - விளங்குகின்ற. உழை மான் - இளமான். பியற்கு இட்டு - முதுகிலிட்டு. பள்ளி - படுக்கை.

6. வானை கிளர - வானை மீன்கள் வாயில் விளங்க. வளைவாள் - வளைந்த வாள்போன்ற. எயிறு-இங்கு அலகு. முரலும் - கத்தும். முதுகாடு - சுடுகாடு. தாளிப்பனை - ஓலை அகலமுடைய ஒருவகைப் பனை. கூளிக்கணங்கள் - பேய்க் கூட்டங்கள். இயம்ப - ஒலிக்க.

7. நொந்தி - புழுதிபட்டு. தடவி - (எங்கும்) தேடி, நுகரும் - உண்ணும். புழுக்கு - புழுக்கிய ஊண்; உணவு. சிந்தித்து இருந்து - பல வித ஆலோசனை கொண்டிருந்து. சிரமம் - துன்பம். படு - உண்டாகின்ற. முழவு - மத்தளம். முறைமை - தாளம் முதலிய ஒற்றுமை; இலயம். அந்தி - மாலைக்காலம்.

8. வேய்கள் - மூங்கில் வகைகள்; மூங்கிலில் முத்துப் பிறக்கும் என்ற கொள்கையின்படி. "வெண்முத்து உதிர": என்றார். ஓயும் - தளர்ந்த

பேய்கள் கூடிப் பிணங்கள்
மாந்தி அணங்கும் பெருங்காட்டில்
**மாயன் ஆட மலையான்**
**மகளும் மருண்டு நோக்குமே.** 8

கடுவன் உகளுங் கழைசூழ்
பொதும்பிற் கழுகும் பேயுமாய்
இடுவெண் டலையும் ஈமப்
புகையும் எழுந்த பெருங்காட்டிற்
கொடுவெண் மழுவும் பிறையும்
ததும்பக் கொள்ளென்(று) இசைபாடப்
படுவெண் துடியும் பறையுங்
கறங்கப் **பரமன் ஆடுமே.** 9

குண்டை வயிற்றுக் குறிய
சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டு படர்ந்த இருள்சூழ்
மயானத் தெரிவாய் எயிற்றுப்பேய்
கொண்டு குழவி தடவி
வெருட்டிக் கொள்ளென்(று) இசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள்
தாழ **விமலன் ஆடுமே.** 10

---

உருவில் - வடிவில், உலறு - வறண்ட. பகுவாய் - பிளந்த வாய். பெருங்காடு - சுடுகாடு. மாயன் - மாயையின் முதல்வன்; சிவபெருமான். மலையான் மகளும் - உமாதேவியாரும். மருண்டு - வியந்து.

9. கடுவன் - ஆண் குரங்கு. உகளும் - தாவிச் செல்லும். கழைசூழ் பொதும்பில் - மூங்கில் சூழ்ந்த பெருங் காட்டில். ஏமப் புகை - சாம்பற் புகை. ததும்ப - விளங்க. கொள் என்று - இஃது இசைக் குறிப்பு. துடி - உடுக்கை. பறை - ஒரு வாத்தியம். கறங்க - ஒலிக்க. மழு - அக்கினி.

10. குண்டை - உருண்டை வடிவான. பிறங்கற் பேய் - சிறு மலை போன்ற வடிவுடைய பேய்கள். இண்டு - கொடி வகைகளில் ஒன்று. குழவி - குழந்தை; குட்டிப்பேய். வெருட்டி - அச்சுறுத்தி. மிண்டி - நெருங்கி. விமலன் - பரிசுத்தன்; சிவபெருமான்.

சூடு மதியம் சடைமேல்
உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில்
ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய்
எயிற்றுக் **காரைக் காற்பேய்தன்**
பாடல் பத்தும் பாடி
ஆடப் பாவம் நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

---

*11.* உடையார் - உடையவர். அரையில் - இடையில். ஆர்த்த - கட்டிய. அழகன் - இறைவன். அருளாலே - திருவருளின் துணையினாலே. காரைக்காற் பேய் - காரைக்காலம்மையார் (பாடிய). பாடல்கள் - திருப் பாடல்கள்.

# 3. திருவிரட்டை மணிமாலை *

[11-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

## கட்டளைக் கலித்துறை

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும்
    போதஞ்சி நெஞ்சமென்பாய் !
தளர்ந்திங்(கு) இருத்தல் தவிர்திகண்
    டாய் ;தள ராதுவந்தி ;
வளர்ந்துந்து கங்கையும் வானத்
    திடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களும்எருக் கும்மிருக்
    குஞ்சென்னி ஈசனுக்கே. 1

## வெண்பா

ஈசன் அவன்அல்லா தில்லை எனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் ; பிரான். 2

---

* காரைக்காலம்மையார் பேய்வடிவத்தை விரும்பிப் பெற்றுத் திருக்கயிலையைத் தரிசிக்கப் புறப்பட்டுச் செல்லும் வழியில் இப் பிரபந்தம் அருளியதாகும். இது கட்டளைக் கலித்துறையும் வெண்பாவும் மாறிமாறி அந்தாதித் தொடையில் இருபது பாடலால் அமைத்தது பற்றித் திருவிரட்டை மணி மாலை எனப் பெயர் பெற்றது.

1. கிளர்ந்து உந்து - முன்னைய வினை தூண்ட அது காரணமாக வந்து சேரும். நெஞ்சம் - நெஞ்சமே ! தவிர்தி - விட்டுவிடு. கண்டாய் - முன்னிலையசை. வந்தி - வணங்குவாயாக. வளர்ந்து உந்து - பெருகிச் செல்லுகின்ற. எருக்கும் - எருக்கு மலரும். சென்னி - தலையினையுடைய. தளராது ஈசனுக்கே வந்தி என்க.

2. கூசுதல் - இங்கு, இறைவனது உயர்வும் தமது இழிவும் கருதி இறைவனை நினைத்தற்கும் தொண்டுபுரிதற்கும் தமக்குத் தகுதி இல்லையே என்று நாணுதல். மறவாது - (இறைவனை) மறவாமல். பிறவாமை-காக்கும் - பிறத்தலை ஒழித்து வீடுபேறு அளித்துக் காப்பான். பிரான் - சிவன்.

### கட்டளைக் கலித்துறை

பிரானென்று தன்னைப்பன் னுள்பர
 வித்தொழு வார்இடர்கண்(டு)
இரானென்ன நிற்கின்ற ஈசன்கண்
 டீர்!இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க்
 கிடந்துபொம் [1]மென்றுறைவாய்
அராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொன்
 நீள்முடி அந்தணனே. 3

### வெண்பா

அந்தணனைத் தஞ்சமென்(று) ஆட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன்—கொந்தணைந்த
பொன்கண்டாற் பூணுதே கோணுகம் பூண்டானே!
என்கண்டாய்? நெஞ்சே! இனி. 4

### கட்டளைக் கலித்துறை

இனிவார் சடையினிற் கங்கையென்
 பாளைஅங் கத்திருந்த
[2]கனிவாய் மலைமங்கை காணில்என்
 செய்தி?கை யிற்சிலையால்

---

பாட பேதம் 1 மென்றுரைவாய், 2 கனிவார்.

3. பன்னுள்-பல நாளும், பரவி-துதித்து, கண்டு இரான்-பார்த்துத் தீர்க்காமல் இரார்; தீர்த்தருளுவர், நிற்கின்ற - எக்காலத்தும் நிலைபெறுகின்ற, ஈசன் - தலைவன்; சிவன், கண்டீர்: முன்னிலையசை, கிண்டி - கிளறி, பொரா நின்ற - மோதுகின்ற, கொன்றைப் பொதும்பர்-கொன்றைமலரின் தொகுதியில், பொம் என்று - இஃது ஒலிக்குறிப்பு, உறை வாய் - விஷப் பையினையுடைய வாய், அரா - பாம்பு, இரைக்கும் - ஒலிக்கும், அந்தணன் - அந்தணனுகிய சிவபெருமான்.

4. அந்தணனை - அந்தணனுகிய சிவனையே, தஞ்சம் - அடைக்கலம், வல்லாளன் - எல்லையில்லாத வல்லமையுடையவன்; சிவன், கொந்தணைந்த பொன்-திரண்ட பொன்னுபரணம், கோணுகம்-கோள் இழைக்கும் பாம்பு, என் கண்டாய் - என்னுமோ?

5. இனி - (கண்ணுக்கு) இனிய, அங்கத்து இருந்த - திருமேனியில் ஒரு பாதியைக் கொண்டு வீற்றிருக்கின்ற, மலை மங்கை - உமாதேவி, என்

முனிவார் திரிபுரம் மூன்றும்வெந்
தன்றுசெந் தீயில்மூழ்கத்
தனிவார் கணையொன்றி னால்மிகக்
கோத்தஎஞ் சங்கரனே. 5

### வெண்பா

சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை—அங்கொருநாள்
ஆவாவென்(று) ஆழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே! உரை. 6

### கட்டளைக் கலித்துறை

உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு
கேட்கிற்செவ் வான்தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றுந்
தொடேல்இழிந்(து) ஓட்டந்(து)எங்கும்
திரைக்கின்ற கங்கையுந் தேன்நின்ற
கொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித்
தலைவைத்த வேதியனே. 7

### வெண்பா

**வே**தியனை வேதப் பொருளானை வேதத்துக்(கு)
ஆதியனை ஆதிரைநன் னாளானைச் — சோதிப்பான்

---

செய்தி-என்ன செய்வீர், கங்கை என்பவளைக் கண்டால் உமாதேவி ஊடல் கொள்வர் என்பதாம். திரிபுரம் மூன்றும் - ஆகாயத்தில் எழும்பிச் சஞ்சரிக்கும் முப்புரங்கள். எம் - எமது. சங்கரன் - சுகத்தைச் செய்பவன்: சிவன். சங்கரனே! காணில் என் செய்தி என்க.

6. பொங்கு அரவம் - சீறுகின்ற பாம்பு. புண்ணியன் - புண்ணிய வடிவினன். ஒரு நாள் - எமன் வந்து உயிர்கொண்டுபோகும் ஒரு நாள். ஆ! ஆ! - இரக்கக் குறிப்பு. ஆழாமை - துன்பக் கடலில் மூழ்கி வருந்தாது. ஓவாது - இடைவிடாது. உரை - உரைப்பாயாக.

7. கேட்கில் - அஃதியாது என்று கேட்பீராகில். செவ்வான் தொடை-செவ்வானத்தைக் கற்றையாகத் தொடுத்ததுபோன்ற தொகுதி; இங்குச் செஞ்சடை. ஓட்டந்து - ஓடி. விரை - நறுமணம். வேதியன் - வேதங்களால் போற்றப்பட்டவன்; ஞானத் தலைவனுமாம்.

வல்லேன [1]மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது 8
கில்லேன மாவென்றுன் கீழ்.

## கட்டளைக் கலித்துறை

கீழா யினதுன்ப வெள்ளக்
கடல்தள்ளி உள்ளூறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென்
பீர் !விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டன்எண்
டோளன்ஐம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன்
ஞளுந் தலைநின்மினே. 9

## வெண்பா

**தலையாய ஐந்தினையுஞ்** சாதித்துத் தாழ்ந்து
தலையா யினவுணர்ந்தோர் காண்பர் — தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். 10

---

பா—ம், 1 மாப்புக்கு

8. வேதத்துக்கு ஆதியானை - வேதங்கள் தோன்றுதற்குக் காரண மானவனை. ஆதிரை நன்னாளானை - திருவாதிரையாகிய நன்னாளினை உடையவனை. சோதிப்பான் - சோதிக்கும் பொருட்டு. சோதித்தல் - அடி செல்லுமளவு காண்டல். :வல் ஏனமாய் - வலிய பன்றி வடிவமாக. மாட்டாது - முடியாது. கில்லேன் - (நான்) அறிய ஆற்றலில்லாதவன். நமா - போற்றி. கில்லேன் அமா என்று பிரிப்பாரும் உளர். கீழ் - கீழ் வீழ்ந்து வணங்குதல்.

9. துன்ப வெள்ளக் கடல் - துன்பவெள்ளமாகிய கடல். என்பீர்- என்று விரும்புகின்றவர்களே! விரவார் புரங்கள் - முப்புரங்கள். எண் டோளன் - சிவன். பன்னாளும் தலை நின்மின் - எக்காலமும் தலைப்பட்டு அந்நிலையில் நிலைத்து நில்லுங்கள்.

10. தலையாய ஐந்து - தலைமையாகிய திருவைந்தெழுத்து; முத்தி பஞ்சாக்கரம். சாதித்து - தியானித்து. தலையாயின - சாதிக்கும் முறை, சிவஞானம் முதலியவற்றை. உணர்ந்தோர் - குருவருளால் உணர்ந்தோர். ஆலாலம் - விஷம். செம்பொற்கழல் காண்பர் என்க. செம்பொற்கழல் காண்டல் - வீடுபேறு அடைதல்.

### கட்டளைக் கலித்துறை

கழற்கொண்ட சேவடி காணலுற்
றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா
வினைநிகர் ஏதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனிஎம்
மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோ? துன்னி
நம்மடுந் தொல்வினையே. 11

### வெண்பா

தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் — மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே! நினை. 12

### கட்டளைக் கலித்துறை

நினையா தொழிதிகண் டாய்! நெஞ்ச
மே! இங்கோர் தஞ்சமென்று
மனையா ளையு(ம்) மக்கள் தம்மையுந்
தேறியோர் ஆறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பன்நந்
தாதைநொந் தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான்அண்ட
வாணன் அடித்தலமே. 13

---

11. சேவடி - இறைவன் திருவடியை. காணுதல் - உள்ளே கண்டு கொண்டிருத்தல். பேணல் உற்றார் - பலவிதத்திலும் வழிபடுகின்ற அடியவர்களது. கண்டபோழ்தத்து - கண்டபோதே. வினை நில்லா என்க. நிகர் - தமக்கு ஒப்பு. கைம்மாமலர்தூய் - கையில் மலர்கொண்டு தூவி. துன்னி - நெருங்கி.

12. தொல்லை வினை - பழைய வினை; சஞ்சிதம். தாழாமே-தாமதியாமல். ஒல்லை - விரைந்து. கூற்றானை - பாகம் உடையவனை. கூற்று உருவம் - இயமனை. நீற்றானை - திருவெண்ணீற்றையுடையவனை.

13. நினையாது ஒழிதி - நினையாமல் விட்டுவிடாதே. கண்டாய்: முன்னிலையசை. தேறி-பொய்யை மெய்யென்று தெளிந்து. ஆறு - கங்கை.

### வெண்பா

அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீமுரித்த வாறென்? — முடித்தலத்தில்
ஆறுடி! ஆறா அனலாடி! அவ்வனலில்
நீறுடி! நெய்யாடி! நீ. 14

### கட்டளைக் கலித்துறை

நீநின்று தானவர் மாமதில்
மூன்றும் நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட
வா(று)என்? திரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா(டு)
அரங்காப் பெயர்ந்துநட்டம்
போய்நின்று பூதந் தொழச்செய்யும்
மொய்கழற் புண்ணியனே. 15

### வெண்பா

புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால் — திண்ணிய
கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த
அம்மானுக்(கு) ஆட்பட்ட அன்பு. 16

---

நம் தாதை - நமது தந்தை. நொந்தாத - தூண்டாத; அணையாத. அண்ட வாணன் - சிவன். அடித்தலமே தஞ்சம் என்க.

14. அடித்தலத்தின் - திருவடியினால். அன்று - அக் காலத்தில். அரக்கன் - இராவணன். ஐந்நான்கு - இருபது. என் - என்னே! ஆறு ஆடி - கங்கையைத் தாங்கியவனே. ஆறா - அணையாத. நீறுடி - நீறுக்கிய வனே; மகா சங்காரஞ் செய்தவனே.

15. தானவர் - அரக்கர்கள்; திரிபுராதிகள். நிரந்துடனே - சம மாக. சிலை தொட்டவாறு என்:- வில்லும் அம்பும் எடுத்துக்கோத்தவிதம் என்னே! திரங்கு வல் வாய் - திரங்கிய பெரிய வாயினையுடைய. பெருங் காடு - மயானம். நட்டம் - நடனம்.

16. செய்தன - முன்னே பல காலங்களில் செய்தன. பொய்ந்நெறி - புறச்சமயம். ஓர் ஐந்து - திருவைந்தெழுத்து. இசைந்தன - பொருந் தியன. கைம்மா - யானை. ஈர் உரிவை - பெரிய தோலை. மூவுரு - அயன் அரி அரன் என்ற மூன்று நிலையும் கூடிய முதல் உருவம்; திருமாலும் உமையும் தாமும் என்பாரும் உளர். அன்பு - அன்பு உண்டாயிற்று.

### கட்டளைக் கலித்துறை

அன்பால் அடைவ(து)எவ் வாறுகொல்?
மேலதோ ராடரவம்
தன்பால் ஒருவரைச் சாரஒட்
டா(து);அது வேயுமன்றி
முன்பா யினதலை யோடுகள்
கோத்தவை ஆர்த்துவெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கோர்
ஏறுகந்(து) ஏறுவதே. 17

### வெண்பா

ஏறலால் ஏறமற்(று) இல்லையே: எம்பெருமான்
ஆறெலாம் பாயும் அவிர்சடையார் — வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு. 18

### கட்டளைக் கலித்துறை

தமக்கென்றும் இன்பணி செய்திருப்
பேமுக்குத் தாம்ஒருநாள்
எமக்கொன்று சொன்னல் அருளுங்கொ
லாம்? இணை யாதுமின்றிச்

---

17. மேலது - (சடை) மேலே, தன்பால் - (அது) தன்பக்கத்தில், அதுவேயும் அன்றி - அதுவல்லாமல். தலையோடுகள் - வெண்டலைகள். வெள்ளை என்பு - வெள்ளை எலும்பு மாலை: இங்கு வெண்டலை மாலைகளும் எலும்பு மாலைகளும் அனுசிதம் என்பதாம். ஏறு - இடபம். இங்கு இடபம் பாயும் என்பது. இங்கு, "அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே" என்ற திருக்கோத்திட்டைத் தேவார அடி உன்னற்பாலது.

18. ஏறு அலால் - இடப ஏற்றினை அன்றி. ஆறு எலாம் - கங்கை யாறு முழுமையும். நாகம் - வாசுகி. சூழ்ந்த - சூழ்ந்து கடைந்த. தடங்கடல் - பெருங்கடல்.

19. தமக்கு என்றும் இன் பணி - தமக்கு எந்நாளும் இனிய தொண்டுகளை. இருப்பேமுக்குத் தாம் - இருக்கின்ற எங்களுக்கு. தாம்: அசை. அருளுங்கொலாம் - அருளுவாரா. இணை - ஒப்பு. பிள்ளை வெள் ஏறு - மழவிடை. தொண்டைக் கனிவாய் - கொவ்வைக் கனிபோன்ற

சுமக்கின்ற பிள்ளைவெள் ளே(று)ஒப்ப
தொன்றுதொண் டைக்கனிவாய்
உமைக்கென்று தேடிப் பெறுதுட
னேகொண்ட உத்தமரே. 19

### வெண்பா

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரம்அடுக்கித் தீயாமுன் — உத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே! கிளர்ந்து.* 20

திருச்சிற்றம்பலம்

---

வாயினையுடைய. கொண்ட - இடது பாகத்தில் கொண்ட. உத்தமர் - உத்தமராகிய சிவபெருமான்.

20. உலந்தக்கால் - இறந்தால். உற்றார்கள் - உறவினர்கள். செத்த மரம் - உலர்ந்த விறகு. நீள் ஆழி - பெரிய கடலில். நெய்யாடிதன் திறமே - நெய்யாடியாகிய சிவபெருமானின் திறத்தினையே. ஆழி நெஞ்சே கிளர்ந்து கேள் - ஆழ்ந்த கருத்துடைய மனமே! இன்புடன் கேட்பாயாக. (ஆழி : இ : சாரியை.)

* இரட்டைமணிமாலை என்ற பிரபந்த வகையுள் இதுவே மிகப் பழமையானது என்று ஊகித்தறியலாம்.

# 4. அற்புதத் திருவந்தாதி *

[11-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் ; — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே !
எஞ்ஞான்று தீர்ப்ப(து) இடர் ? 1

இடர்களையா ரேனும் எமக்(கு)இரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்—சுடர்உருவில்
என்பருக் கோலத்(து) எரியாடும் எம்மானார்க்(கு)
அன்பறா(து) என்நெஞ்(சு) அவர்க்கு. 2

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் ; என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ(து) அல்லால்—பவர்ச்சடைமேல்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்(கு)
ஆகாப்போம் ; எஞ்ஞான்றும் ஆள். 3

ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டால்
கேளாத(து) என்கொலோ ? கேளாமை—நீள்ஆகம்

---

* இப்பிரபந்தம் காரைக்காலம்மையார் பேய்க்கண வடிவத்தை வேண்டிப் பெற்றுத் திருக்கயிலையைத் தரிசிக்கப் புறப்பட்டுச் செல்லும் வழியிடையே அருளியதாகும். இஃது இறைவனின் அற்புதச் செயல் முதலியவற்றை வெண்பாவினால் அந்தாதித் தொடையோடு அமைந்து மண்டலித்ததாகும். அதனால், இஃது 'அற்புதத் திருவந்தாதி' எனப் பெயர் பெற்றது.

1. காதல் சிறந்து - அன்புடனே. சேர்ந்தேன் - இடைவிடாது சார்ந்தேன். நிறம் - நீல நிறம். மைஞ்ஞான்ற - விடம் பொருந்திய. இடர் - பிறவித் துன்பம். இப்பாடல் அம்மையார் திருவருளை வேண்டிப் பேய்வடிவம் பெற்றபோது முதலிற் பாடியதாம்.

2. களையாரேனும் - நீக்காவிடினும் விடுக. எமக்கு - இஃது உயிர்களை உள்ளடக்கிக் கூறியது. படரும் நெறி - செல்லும் நன்னெறி. சுடர் உருவு - செம்மேனி. என்பு - எலும்பு. அவர்க்கு - அப்பெருமானிடத்தில்.

3. அவர்க்கே - சிவபெருமானுக்கே. எழு பிறப்பு - எழுவகைப் பட்ட பிறவிகள். பவர்ச் சடை - நெருங்கிய சடை. பாகாப்போழ் -

செம்மையான் ஆகித் திருமிடறு மற்றொன்றாம்
எம்மைஆட் கொண்ட இறை. 4

இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்; தோற்றி
இறைவனே ஈண்(டு)இறக்கம் செய்வான்; — இறைவனே
எந்தாய்! எனஇரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான். 5

வானத்தான் என்பாரும் என்க;மற்(று) உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க; — ஞானத்தால்
முன்நஞ்சத் தால்இருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பன் யான். 6

யானே தவமுடையேன்; என்நெஞ்சே நன்னெஞ்சம்;
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்; — யானேஅக்
கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக்(கு) ஆளாயி னேன். 7

ஆயினேன் ஆள்வானுக்(கு); அன்றே பெறற்கரியன்
ஆயினேன்; அஃதன்றே ஆமாறு—தூய

---

பிறைச் சந்திரன். ஆகாப்போம் - ஆகோம். எஞ்ஞான்றும் - பெத்த நிலை முத்த நிலை என்ற இரண்டினும்.

4. அல்லல் அறிய - எங்கள் துன்பத்தை அறியும்படி. கேளாமை - கேட்டருளாமை. நீள் ஆகம் - திருமேனி முழுவதும். மற்றொன்று ஆம் - கருமை நிறமாம்.

5. எவ்வுயிரும் - எல்லா உயிர்களையும்; விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர் என்ற மூவகை உயிருமாம். தோற்றுவிப்பான் - பிறவியில் தோன்றும்படி செய்விப்பான். தோற்றி - தோற்றுவித்த உயிர்களை. இரங்குதல் - துன்பத்தைக் கூறி அன்புடன் நிற்றல்.

6. உம்பர்கோன் - தேவர்களுக்குத் தலைவன்; சிவன். தானத்தான் - மண்ணுலகத்தான். ஞானத்தால் - திருவருள் ஞானத்தினால். முன் - திருப்பாற் கடல் கடைந்த காலத்தில். நஞ்சு - விஷம். என் நெஞ்சத் தான் - என் மனத்திலிருப்பவன்; நினைப்பவர் மனம் கோயிலாக் கொண் டவன்; மலர்மிசை ஏகினவன்.

7. நன்னெஞ்சம் - நல்ல மனம். பிறப்பறுப்பான் - பிறப்பறுக்கும் பொருட்டு. கைம்மா - யானை. உரி - தோல். நுதல் - நெற்றி. ஆளா தல் - அடிமைப்பட்டுத் தொண்டு புரிதல்; இது பிறப்பறுக்கும் வழி. ஏகாரங்கள்: தேற்றம்.

புனற்கங்கை ஏற்றான்ஓர் பொன்வரையே போல்வான்
அனற்கங்கை ஏற்றான் அருள். 8

அருளே உலகெலாம் ஆள்விப்ப(து); ஈசன்
அருளே பிறப்பறுப்ப(து); ஆனால்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ(து) எனக்கு. 9

எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்;—எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்;
உண்டே எனக்கரிய(து) ஒன்று? 10

ஒன்றே நினைந்திருந்தேன்; ஒன்றே துணிந்தொழிந்தேன்;
ஒன்றேஎன் உள்ளத்தி னுள்அடைத்தேன்;—ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற்(கு) ஆளாம் அது. 11

அதுவே பிரானும்ஆ(று); ஆட்கொள்ளும் ஆறும்
அதுவே; இனிஅறிந்தோம் ஆனால்—அதுவே

---

8. ஆயினேன் - (ஆள்) ஆயினேன். ஆள்வான் - ஆட்கொள்ளும் சிவன். அன்றே - அப்பொழுதே. பெறற்கரியன் ஆயினேன் - சிவமாந் தன்மையுற்றேன். அஃதன்றே - அஃது அல்லவா? புனல் கங்கை; கங்கா தேவி. அனற்கு - அனலே; உருபு மயக்கம். அங்கை - உள்ளங்கை. அனற் கங்கை - நெருப்பும் கபாலமும் கையில் (கம் - கபாலம்) எனினு மாம். அருள் அஃதுஅன்றே என்க.

9. அருளே - ஈசனது அருளாகிய சிவ சத்தியே. உலகு - உயிர்: ஆகு பெயர். அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதி - அவன் அருளே கண்ணாகக் கண்டு அவன் அருளாலே அவன் தாள் வணங்குதல். எப்பொ ருளும் எனக்கு ஆவது - எப்பொருளும் எனக்கு அதுவே ஆவதாம்.

10. மனக்கு - மனத்துக்கு. வைப்பு - சேமித்து வைத்த பொருள். பிரான் - தலைவன். உண்டே - உண்டோ? இல்லை.

11. ஒன்றே-(சிவனுக்கு ஆளாதல்) ஒன்றையே; இங்கு நினைதலும், கேட்டலும், சிந்தித்தலும் ஆகும். துணிதல், தெளிதலாகும்; உள்ளடைத் தல், நிட்டைகூடல் ஆகும். திங்கட் கதிர் - பிறைச் சந்திரன். ஒளி - ஒளி யையுடைய தீ.

12. ஆம் ஆறு - ஆகும் திறம். இனி - மேலும். அறிந்தோமானால் - ஆராய்ந்தோமானால். 'பனிக்கு அணங்கு கன்னியார் - கார்காலத்தில்

பனிக்கணங்கு கண்ணியார் ஒண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு. 12

தகவுடையார் தாமுளரேல் தார்அகலம் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர் ;—மிகஅடர
ஊர்ந்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமே லேபாவம் தான். 13

தானே தனிநெஞ்சம் தன்னை உயக்கொள்வான்
தானே பெருஞ்சேமம் செய்யுமால்—தானேஓர்
பூணாகத் தாற்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழும்
நீணாகத் தானை நினைந்து. 14

நினைந்திருந்து வானவர்கள் நீள்மலரால் பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார் ;—நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய்! வேதியனே! என்கின்றேற்(கு)
என்செய்வான் கொல்லோ ? இனி. 15

இனியோம்நாம் உய்ந்தோம் ; இறைவன்தாள் சேர்ந்தோம் ;
இனியோர் இடர்இல்லோம் ; நெஞ்சே ! — இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண். 16

---

மலர்கின்ற கொன்றை மலர் மாலையையுடைய சிவபெருமான். அணங்குதல் - மலர்தல். கண்ணி - தலைமாலை. தனிக்கணங்கு - தனிக்கண் அங்கு. தகவு - தனிப்பெருமை.

13. தார் - மாலை. அகலம் - மார்பு. புகவிடுதல் - புரளவிடுதல். சார்ந்திடுமேல் - சார்ந்திடுமாகில். ஏ : அச்சம் குறிக்கும் இடைச்சொல். பாவம் - இங்குப் பழி என்ற பொருள்.

14. கொள்வான் - கொள்ளும்படி. பெரும் சேமம் - பெரிய காவல். ஆகம்-உடம்பு. நீள்நாகத்தான்-சிவபெருமான். இறைவனை இடையறாது நினைந்து தனக்குப் பெருங்காவல் செய்துகொண்டமையின் 'தனிநெஞ்சம்' என்றார்.

15. வானவர்கள் நினைந்திருந்து - தேவர்கள் நினைந்திருந்தும். மின் செய் - மின்போன்ற. வான் - பெரிய. வேதியனே - சிறந்தவனே. இனி என்செய்வான் கொல்லோ - (இவன் எனக்கு) இனி என் செய்வானோ? அறியேன்.

16. இனியோம் - இனியாராயினோம். ஓர் இடர் இல்லோம் - ஒரு துன்பமும் இல்லாதவராயினோம், இடர் - இடும்பை ; பிறவித் துன்பம்,

காண்பார்க்கும் காணலாம் தன்மையனே ; கைதொழுது
காண்பார்க்கும் காணலாம் ; காதலால் — காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே ; தொல்லுலகுக்(கு)
ஆதியாய் நின்ற அரன். 17

அரன்என்கோ ? நான்முகன் என்கோ ? அரிய
பரன்என்கோ ? பண்புணர மாட்டேன்—முரண்அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலால் செற்றானை
யானவனை எம்மானை இன்று. 18

இன்று நமக்(கு)எளிதே ; மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை—என்றுமோர்
மூவா மதியானை மூவேழ் உலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு. 19

அறிவானும் தானே ; அறிவிப்பான் தானே ;
அறிவாய் அறிகின்றான் தானே ; — அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே ; விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளும் தானே அவன். 20

அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல்காற் றாவான் — அவனே

---

கனைக் கடல் - கனை கடல் ; ஒலிக்குங் கடல். வினைக்கு அடலை ஆக்குவிக்கும் - இருவினைகளுக்கும் வன்மையை உண்டாக்கும்.

17. காண்பார்க்கு என்ற மூன்றினையும் முறையே குருவையே சிவமாகவும், இலிங்கத்தையே சிவமாகவும், பத்தரது வேடத்தையே சிவமாகவும் காண்பார்க்கு எனப் பொருள் கொள்க. நின்ற - (அழிக்குங் காலத்தில் தான் அழியாது) எஞ்சி நின்ற.

18. அரன் - உருத்திரன்- என்கோ - என்பேனோ? அரிய பரன் - திருமால். (பரன் - அப்பாற்பட்டவன் ; அரிய - அந்நான்முகனுக்கு அரிய) முரண் - மாறுபாடு. தானவன் - இராவணன். பாதம் - திருவடி. இன்று - இப்பொழுது.

19. அன்றும் - இன்றுமட்டுமே அன்றி அக்காலத்தும். ஓர் மூவா மதி - ஒப்பற்ற இளம் பிறைச் சந்திரன். உலகங்களாவான் - எங்கும் நீக்கமற நிறைந்து நின்றவன். காணும் அறிவு நமக்கு எளிதே என்க.

20. அறிவான் - காண்பவன். அறிவிப்பான் - காட்டுபவன். அறிவாய் அறிகின்றான் தானே - அறிவினுள்ளே இரண்டறக் கலந்து நின்று உயிர்கள் அறியும்படி தானும் அறிபவன். சுடர் - தீ. பார் - நிலம்.

இயமான னுய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனுகி நின்ருனும் வந்து. 21

வந்திதனைக் கொள்வதே ஒக்கும்;இவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினே ; — வந்தோர்
இராநீர் இருண்டனைய கண்டத்தீர் ! எங்கள்
பிரானீர் !உம் சென்னிப் பிறை. 22

பிறையும் புனலும் அனல்அரவும் சூடும்
இறைவர் எமக்கிரங்கா ரேனும்—கறைமிடற்ற
எந்தையார்க்(கு) ஆட்பட்டேம் என்றென்(று) இருக்குமே
எந்தையா உள்ளம் இது. 23

இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமா(று) !
இதுவன்றே என்றனக்கோர் சேமம் !—இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாய்என் சிந்தனைக்கே ;
இன்னுஞ் சுழல்கின்ற(து) இங்கு ! 24

இங்கிருந்து சொல்லுவதென்? எம்பெருமான் எண்ணுதே
எங்கும் பலிதிரியும் எத்திறமும்—பொங்கிரவில்

---

21. அவனே - அந்த இறைவனே. இருசுடர் - ஞாயிறு திங்கள். புவி - நிலம். இயமானன் - உயிர். அட்ட மூர்த்தி - எட்டுத் திருமேனிகளையுடையவன். அட்ட மூர்த்தியும் என்ற உம்மை, வேறு திருமேனியும் கொண்டருளுவர் என்பதாம். அட்டமூர்த்தி - சகள வடிவம். ஞானமயன் நிட்கள வடிவம்.

22. இதனை - இப்பிறையை. வாள் - ஒளி. அரவு - பாம்பு. நீர் - மேகம். இரா ; இரவைப்போல. பிரானீர் - தலைவரே. சென்னி - தலை.

23. புனல் - கங்கை. அனல் - தீ. இரங்காரேனும் - இரக்கங் கொள்ளாராயினும். கறைமிடற்ற - நஞ்சின் கறையுள்ள கண்டத்தை யுடைய. எந்தையார்க்கு - எம் தந்தையாகிய சிவபெருமானுக்கு. தயா வுள்ளம்என்பது எதுகைநோக்கித்தையாவுள்ளமெனநின்றது. தயா-அன்பு.

24. சேமம் - (சேர்ந்த) பொருள். உருவாய் - உருவமாகி. மீண்டு - மறுபடியும், ஆய் - ஆகி. இன்னும் - எப்போதும். சுழல்கின்றது இது அன்றே - சுழல்கின்றதாகிய இத்திருவுருவம் அல்லவா. இங்கு என்றது உள்ளத்தில்.

25. இங்கு - (இறைவனைக் காணுத நிலையில்) இவ்விடத்து. பலி திரியும் - பலிக்கு அலைந்து திரியும். இரவு-சங்கார காலம். ஈமம் - உலகம்

ஈமவனத்(து) ஆடுவதும் என்னுக்கென்(று) ஆராய்வோம்
நாமவனைக் காண லுற்ற ஞான்று. 25

ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோல் மின்னுவன
போன்ற; கறைமிடற்றான் பொன்மார்பின்—ஞான்றெங்கும்
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே
அக்கயலே [1]தோன்றும் அரவு. 26

அரவமொன்(று) ஆகத்து நீநயந்து பூணேல்;
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள்;—முரண்அழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பால் எய்தானே!
பொன்னாரம் மற்றொன்று பூண். 27

பூணாக ஒன்று புனைந்தொன்று பொங்கதளின்
நாணாக மேல்மிளிர நன்கமைத்துக்—கோணாகம்
பொன்முடிமேற் சூடுவதும் எல்லாம் பொறியிலியேற்(கு)
என்முடிவ தாக? இவர். 28

இவரைப் பொருளுணர மாட்டாதார் எல்லாம்
இவரை இகழ்வதே கண்டீர்!—இவர்தமது

---

பா—ம். 1 வைத்த அரவு.

சங்கரிக்கப்பட்ட இடம். ஈமவனம் - சுடுகாடுமாம். ஆடுதல் - உலகம் மீளத் தோன்றும்பொருட்டுச் செய்யும் நடனம். என்னுக்கு - எதன் பொருட்டு. காணல் உற்ற ஞான்று - காணும்பொழுது. ஆராய்தல் - அநுபவ முதிர்ச்சியில் திளைத்து அறிதல்.

26. ஞான்ற - தொங்கிய. குழற்சடைகள் - சடைத் தொகுதி. இஃது உமாதேவியாரின் கூந்தல் தொகுதி. வரை - கோடு. கறை மிடறு - நீலகண்டம். மிளிரும் - விளங்கும். அரவு மிளிரும் என்க. அக்கு - என்பு மாலை. அயலே - பக்கத்திலே.

27. ஆகம் - மார்பு. நயந்து - விரும்பி. பூணேல் - பூணவேண்டா. இரந்தோம் - வேண்டிக்கொண்டோம். முரண் - மாறுபாடு. ஒன்னாதார் - பகைவர். மூவெயில் - மூன்று மதில்கள்; திரிபுரம். பூண் - பூண்பாயாக.

28. பூண் - அணிகலம். அதள் - (புலித்) தோல். நாண் - கச்சு; அரைஞாண். எல்லாம் - இவையும் மற்றும் இவைபோல்வனவும். பொறி யிலியேற்கு - அறிவில்லாத எனக்கு.

29. பொருள் உணரமாட்டாதார் - திருநீறு பூசுதலால் அழிவில்லா தவர் என்ற பொருளையும், பேய்க்கோலங்கொள்ளுதலால் ஆனந்தம் அளிப்

பூக்கோல மேனிப் பொடிபூசி என்பணிந்த
பேய்க்கோலம் கண்ட பிறர். 29

**பிறர்அறிய லாகாப் பெருமையரும் தாமே!**
பிறர்அறியும் பேருணர்வும் தாமே!—பிறருடைய
என்பே அணிந்திரவில் தீயாடும் எம்மானார்
வன்பேயும் தாமும் மகிழ்ந்து. 30

**மகிழ்தி மடநெஞ்சே!** மானுடரின் நீயும்
திகழ்தி; பெருஞ்சேமம் சேர்ந்தாய்;—இகழாதே;
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க்(கு) ஆட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு. 31

**பெரு**கொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போங்கொழுகிற்(று) ஒக்கும்:—தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் தன்மார்பின் நூல். 32

**நூல**றிவு பேசி நுழைவிலா தார்திரிக!
நீல மணிமிடற்றான் நீர்மையே—மேலுலந்த(து);
எக்கோலத்(து) எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்(து) அவ்வுருவே ஆம். 33

---

பவர் என்ற பொருளையும் அறிந்துகொள்ளமுடியாதவர். கண்டீர்; முன்னிலையசை. பூக்கோல மேனி - சிவந்த திருமேனி. பொடி - திருநீறு. பிறர் - அந்நியர். பா—ம். கண்டார் பிறர்.

30. பிறர் அறியலாகா - பிறர் எவராலும் அறியப்படாத: "அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே" என்பது தேவாரம். பிறருடைய என்பு - பிரம விட்டுணுக்களின் எலும்புகள். இரவு - சர்வ சங்கார காலம். பேருணர்வு - முற்றுணர்வு. வன் - வலிய.

31. மகிழ்தி - மகிழ்வாய்- மானுடரின் - மானுடர்க்குள். சேமம் - காவலிடம். யார் என்பேயேனும் - பிரம விஷ்ணுக்களின் எலும்புகளையும். "ஈசனுக்கு அன்பில்லார் ... தமக்கும் அன்பு இல்லார்" (சிவஞான சித்தியார்) ஆதலின், 'அன்பே இன்னும் பெருக்கு' என்றார்.

32. பிள்ளைப் பிறை - இளம் பிறைச் சந்திரன். முதற் கண்ணான் - எல்லார்க்கும் முன்னே உள்ளவன்; "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்பது அப்பர் தேவாரம்.

33. நுழைவு இலாதார் - நுட்பமாக மெய்ப்பொருளை ஆராயும் அறிவு இல்லாதவர். நீர்மை - தன்மை (பெருமை). மேல் உலந்தது -

ஆமா(று) [1]அறியாமே வல்வினைகள் அந்தரத்தே
நாமாள்என்(று) ஏத்தார் நகர்மூன்றும்—வேமா(று)
ஒருகணையால் செற்றானை உள்ளத்தால் [2] உள்கி
அருகணையா தாரை அடும். 34

அடுங்கண்டாய் வெண்மதியென்(று) அஞ்சி இருள்போந்(து)
இடங்கொண் டிருக்கின்ற(து) ஒக்கும்;—படங்கொள்
அணிமிடற்ற பேழ்வாய் அரவசைத்தான் கோல
மணிமிடற்றின் உள்ள மறு. 35

மறுவுடைய கண்டத்தீர்! வார்சடைமேல் நாகம்
தெறுமென்று தேய்ந்துழலும்; ஆஆ!—உறுவான்
தளரமீ(து) ஓடுமேல் தானதனை அஞ்சி
வளருமோ? பிள்ளை மதி. 36

மதியா அடல்அவுணர் மாமதில்மூன்(று)அட்ட
மதியார் வளர்சடையி னானை—மதியாலே
என்பாக்கை யால்இகழா(து) ஏத்துவரேல் இவ்வுலகில்
என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு. 37

---

பா—ம். 1 அறியாவே. 2 உள்ளி.

தனக்கு மேல் ஒன்றும் இல்லாமே செய்து எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தியது. பின் இரண்டடிகளோடு "ஆர் ஒருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்ற அப்பர் தேவாரத்தை ஒப்புநோக்குக.

34. ஆம் ஆறு - ஆகும் விதம். அந்தரம் - வானம். ஆள் - (இறைவனுக்கு) அடிமை. ஏத்தார் - பகைவர்; திரிபுரர். வேமாறு - வெந்து போகுமாறு. கணை - அம்பு. செற்றான் - அழித்தவன் (சிவன்.) அடும் - அழிக்கும். வல்வினைகள் அடும் என்க. "சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே" என்பது அப்பர் தேவாரம்.

35. கண்டாய்; முன்னிலையசை: அணி மிடற்ற அரவு - அழகிய கழுத்தையுடைய பாம்பு. பேழ் - பிளந்த. அசைத்தான் - இறுக்கிக் கட்டியவன். கோலம் - அழகு. மறு - மறுபோன்றவிடம்.

36. வார் - நீண்ட நாகம் தெறும் என்று மதி தேய்ந்து உழலும் என்க. தெறும் - கொன்றுவிடும். உழலும் - வருந்தும். ஆ ஆ-இரக்கக் குறிப்பு.

37. அடல் - வலிமை பொருந்திய, அவுணர் - அரக்கர்: திரிபுரர். மதியார் - சந்திரன் பொருந்திய, மதியாலே ஏத்துவரேல் என்க. சிவனை ஏத்துவோர் பிறவாமை எய்துவர் என்பதாம். ஆக்கை - உடல்,

ஈண்டொளிசேர் வானத்(து) எழுமதியை வாளரவம்
தீண்டச் சிறுகியதே போலாதே—பூண்டதோர்
தாரேறு பாம்புடையான் மார்பில் தழைத்திலங்கு
கூரேறு கார்ஏனக் கொம்பு. 38

கொம்பினையோர் பாகத்துக் கொண்ட குழகன்றன்
அம்பவள மேனி யதுமுன்னம்—செம்பொன்
அணிவரையே போலும் : பொடிஅணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து. 39

**மறித்து மடநெஞ்சே!** வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர் பாதம் ;—குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்(டு)
உள்ளாதார் கூட்டம் ஒருவு. 40

**ஒருபால் உலகளந்த மாலவனும் : மற்றை**
**ஒருபால் உமையவளாம்** என்றால்—இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. 41

---

38. தீண்ட - பற்ற. சிறுகியது - நெருங்கியது. போலாதே - போலும். தார் ஏறும் - மாலைபோல் இருக்கும். ஏறு - உவம உருபு. கூர் ஏறு - கூர்மை பொருந்திய. கார் - கருமை. ஏனம் - பன்றி. ஏனக் கொம்பு - திருமாலின் வராகாவதாரத்தின் கொம்பு. ஒளிசேர் வானம் - விரிந்து சிவந்த மார்புக்கும், பிறை - பன்றிக்கொம்புக்கும் உவமை என்க.

39. கொம்பு - பூங்கொம்புபோன்ற உமாதேவியார் : உவமையாகு பெயர். குழகன் - அழகன். பொடி - விபூதி. அணி மணி - அழகு. வரை - மலை.

40. மறித்து - மீண்டும்மீண்டும் (எப்பொழுதும்). குறித்து - குறிக்கோளாகக்கொண்டு. தொழு - கைகூப்பித் தொழு. தொண்டர் பாதம் தொழு என்க. திங்கட் குறுங்கண்ணி கொண்டார் மாட்டு - சந்திரனை மாலைபோல் அணிந்த சிவபெருமானிடத்து. உள்ளாதார் கூட்டம் - நினைக்காதவர் கூட்டுறவை. ஒருவு - நீங்கு. இங்கு, "ஆள் அலாதவரைக் கண்டால் அம்ம நான் அஞ்சுமாறே" எனவும், "நள்ளேன் நினது அடியாரொடு அல்லால்" எனவும் வரும் திருவாசக அடிகள் உன்னற்பாலன.

41. ஒரு பால் - ஒரு பக்கம். ஒருபால் உலகளந்த மாலவன் என்றது கேசவார்த்த வடிவை. மற்றை ஒருபால் உமையவள் என்றது அர்த்தநாரீசுவர வடிவை. இருவர் நிறமும் ஒன்றே ஆதலின் சிவபெருமான் நிறம் யாதோ என்று வினவியதாகும். மின் - உமை.

நேர்ந்தரவம் கொள்ளச் சிறுகிற்ருே? நீ அதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ?—பேர்ந்து
வளங்குழவித் தாய்வளர மாட்டாதோ? என்னே?
இளங்குழவித் திங்கள் இது. 42

திங்கள் இதுசூடிச் சில்பலிக்கென்(று) ஊர்திரியேல்;
எங்கள் பெருமானே! என்றுஇரந்து—பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாம்விலக்க வல்லமே?
தானே அறிவான் தனக்கு.. 43

தனக்கே அடியனுய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவா(று) என்கொல்?—மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான். 44

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே வேண்டிப்—பிரானவனை
எங்குற்ருன்? என்பீர்கள்! என்போல்வார் சிந்தையினும்
இங்குற்ருன்: காண்பார்க்(கு) எளிது. 45

எளிய(து) இதுவன்றே: ஏழைகாள்! யாதும்
அளியீர்! அறிவிலீர்! ஆஆ!—ஒளிகொள்மிடற்(று)

---

42. சிறுகிற்ருே - சிறுகியதோ. ஈர்ந்து - பிளந்து. என்னே - இங்கு இரக்கக் குறிப்பு. குழவித்தாய் - குழந்தையாய். இறைவன் முடியில் இருக்கும் பிறை வளராது இருப்பதற்குக் காரணம் கூறியவாறு.

43. சில்பலி - சிறு பிச்சை. திரியேல் - திரியாதே. ஒளி - இங்குத் தவம், அறிவு முதலிய ஒளி. விலக்காரேல் - விலக்காதுபோனுல், யாம் விலக்க வல்லமே - எம்மால் விலக்கமுடியுமா? (முடியாது). தானே அறிவான் - இயல்பாகவே பேரறிவுடையவன். தனக்கு - தன்னை; உருபு மயக்கம்.

44. தனக்கே - வேறொருவர்க்குமின்றி தனக்கே. அருளாவாறு என் - அருளாதது என்? மனக்கு இனிய - மனத்திற்கு இனிய. மணவாளன் - கணவன். கொல்: அசைநிலை.

45. பெரு நெறி - சிறந்த நெறி; சிவநெறி. பேணி - விரும்பி. என்பீர்கள் - என்று கேட்பவர்களே. என்போல்வார் சிந்தையினும் இங்குற்ருன் - இங்கு "மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத்தன் அடியே பாடும் தொண்டர், இனத்தகத்தான்" என்னும் அப்பர் தேவார அடிகள் கருதற்பாலன.

எந்தைஅராப் பூண்டுழலும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழுந் திறம். 46

திறத்தான் மடநெஞ்சே ! சென்றடைவ(து) அல்லால்
பெறத்தானும் ஆதியோ ? பேதாய் !—நிறத்த
இருவடிக்கண் ஏழைக்(கு) ஒருபாகம் ஈந்தான்
திருவடிக்கட் சேருந் திரு. 47

திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும் ;
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்;—ஒருநாள்
இதுமதியென்(று) ஒன்றாக இன்றளவும் தேரா(து);
அதுமதியொன்(று) இல்லா அரா. 48

அராவி வளைத்தனைய அங்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய ஓடி—விராவுதலால்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே?
தன்னோடே ஒப்பான் சடை, 49

சடைமேல்அக் கொன்றை தருகனிகள் [1]போன்று
புடைமேவித் தாழ்ந்தனவே போலும் ; — முடிமேல்

---

பா—ம். 1 போந்து.

46. அளியீர் - கருணையில்லாதவரே, ஆ ஆ - இரக்கக் குறிப்பு. உள் நினைந்த சிந்தை - நீங்காது நினைக்கும் மனம். திறம் - விதம்.

47. திறத்தான்-அருட்டிறத்தால் அன்றி. பெறத்தானும் ஆதியோ - பெறுதற்குரிமை உடையை ஆவையோ ? (ஆகாய்), பேதாய்-பேதையே, நிறத்த - நிறம்பொருந்திய, இரு வடி கண் ஏழை - பெரிய கூர்மையான கண்களையுடைய உமாதேவியார், திரு - முத்திச் செல்வம்.

48. ஏனம் - பன்றி. மருப்பு - கொம்பு. பிறைக் கொழுந்து - இளம் பிறை, (இது) மதி - சந்திரன். மதி ஒன்று இல்லா - அறிவு இல்லாத. அரா - பாம்பு, ஒரு நாள் - ஒரு நாளேனும்.

49. அராவி - தேய்த்து. குழவித் திங்கள் - பிறைச்சந்திரன். விராவுதலால் - பொருந்துதலால். வெள்ளிப்புரி - வெள்ளிக் கம்பி. தன்னோடே ஒப்பான் - தன்னைத் தானே ஒப்பான், தன்னை ஒப்பார் வேறு இல்லாதவன் ; இறைவன் "தனக்கு உவமை இல்லாதான்" என்பது திருக்குறள்.

50. கனி - பழம், கொன்றை தரு கனிகள் - கொன்றை மரத்தில் கரியனவாய் நீண்டு தொங்கும் முற்றிய காய்கள், இவை உமாதேவியாரின் குழற்சடைக்கு உவமை. புடை மேவி - பக்கத்தே பொருந்தி. வலப்பால்

வலப்பால்அக் கோலமதி வைத்தான்றன் பங்கின்
குலப்பாவை நீலக் குழல். 50

**கு**ழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்(து)
எழிலாக வைத்(து)ஏக வேண்டா ; — கழலார்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டிற் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு. 51

**அ**ங்கண் முழுமதியஞ் செக்கர் அகல்வானத்(து)
எங்கும் இனிதெழுந்தால் ஒவ்வாதே ; — செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். 52

**சீ**ரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேணுலவி
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப் — போரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்ஈசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேயோர் கார். 53

**கா**ருருவக் கண்டத்(து)எம் கண்ணுதலே! எங்கொளித்தாய் ?
ஓருருவாய் நின்னோ(டு) உழிதருவான் — நீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணுமே பண்டு. 54

---

- வலது பக்கம். கோல மதி வைத்தான் - அழகிய பிறை சூடிய சிவ பெருமான். குலப்பாவை - உமை. குழல் - கூந்தல்,

51, சிறுபுறம் - பிடரி. கோல் வளை - திரண்ட வளையல்; இங்கு உமாதேவியார். எழில் - அழகு. கழல் - வீரக் கழல், அழல் - தீ. பேரிரவு - நள்ளிரவு. ஈமப் பெருங் காடு - உலகம் சங்கரிக்கப்பட்ட இடம்.

52, செக்கர் - சிவந்த. அகல் - அகன்ற. செங்கண் திருமாலைப் பங்குடையான் - கேசவார்த்தமூர்த்தி. சிர் - அழகுக்கு.

53. சீர் ஆர்ந்த - சிறப்பு வாய்ந்த. மலர் தழைப்ப - பூத்தலாலும் பேரியாறு - கங்கை. நீத்தம் ஆய் - வெள்ளம் வருதலாலும். அசைத்த - கட்டிய. செவ்வே - செம்மையாக. கார் - கார்காலம்போலும்.

54. கார் உருவம் - கருமை நிறம் பொருந்திய, கண்ணுதலே - சிவபெருமானே, ஓருரு என்றது தாருக வனத்தில் பிச்சைக்குச் சென்ற போது திருமால் மோகினி வடிவுடன் ஏற்றபடி வந்ததை. உழி தருவான் - திரிபவன் திருமால். பண்டு - (அடி முடி தேடி அறியமுடியாத) அந் நாளில்.

**ப**ண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டங் கறுத்ததுவும் அன்றியே — உண்டு;
பணியுறுவார் செஞ்சடைமேற் பால்மதியின் உள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. 55

**வ**டுவன்(று) எனக்கருதி நீமதித்தி யாயின்
சுடுவெண் பொடிநிறத்தாய்! சொல்லாய் — படுவெண்
புலால்தலையின் உள்ளூண் புறம்பேசக் கேட்டோ?
நிலாத்தலையிற் சூடுவாய் நீ. 56

**நீ**யுலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல்கண்டாய்; — தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விடஅரவம் மேலாட மிக்கு. 57

**மி**க்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தால் ஒவ்வாதே; — செக்கர்போல்
ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கவன்றன் பொன்னுருவில்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு. 58

**ப**ண்புணர மாட்டேன்நான்; நீயே பணித்துக்காண்;
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா! — பெண்புணரும்

---

55. பண்டு - முன்னொரு காலத்தில். அமரர் - தேவர். பணி உறுவார் - பாம்புகளை அணிந்த சிவன். பால் - வெண்மை. வார் - நீண்ட (சடை) எனினுமாம். மணிமறு - அழகிய வடு.

56. வடு அன்று - குற்றம் அன்று. மதித்தி ஆயின் - கருதினால். வெண் பொடி நிறத்தாய் - விபூதியை அணிந்த மார்பினையுடையவரே. வெண் புலால் தலை - பிரம கபாலம். ஊண் - உண்ணுதல். புறம் பேசுதல்- பழித்துப் பேசுதல். நிலா - சந்திரன்.

57. இரப்பினும் - பலி ஏற்றாலும். தீய அரவு - தீய பாம்பு. செல் கண்டாய் - செல்வீராக. மடவரலார் - தாருகவனத்துப் பெண்கள். விடம் - விஷம். அரவம் - பாம்பு. மிக்கு மேலாட அஞ்சி, வந்து பலி யிடார் என்க.

58. வீங்கிய - மிகுந்த. பொங்கு - செறிந்த. செக்கர்போல் ஆகத்தான் - செவ்வானம் போன்ற திருமேனியை உடையவன்; சிவ பெருமான். உரு - திருமேனி.

அவ்வுருவோ ? மாலுருவோ ? ஆனேற்றாய் ! நீறணிவ(து)
எவ்வுருவோ நின்னுருவ மேல். 59

மேலாய மேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே—மாலாய
கைம்மா மதகளிற்றுக் காருரிவை போர்த்தபோ(து)
அம்மான் திருமேனி அன்று. 60

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன் ;
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் ;—என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான்? என்பார்கட்(கு) என்னுரைக்கேன் !
எவ்வுருவோ நின்னுருவம் ஏது ? 61

ஏதொக்கும்? ஏதொவ்வா(து)? ஏதாகும்? ஏதாகா(து)?
ஏதொக்கும் என்பதனை யாரறிவார் ?—பூதப்பால்
வில்வேட னாகி விசயனோ(டு) ஏற்றநாள்
வல்வேட னான வடிவு. 62

வடிவுடைய செங்கதிர்க்கு மாறாய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்குங் கொல்லோ ?—கடியுலவு
சொன்முடிவொன்(று) இல்லாத சோதியாய் ! சொல்லாயால் ;
நின்முடிமேல் திங்கள் நிலா. 63

---

59. உணரமாட்டேன் - உணரவலியில்லேன், பணித்துக்காண் - பணித்தருள்வாயாக. பெண் புணரும் அவ்வுரு - இதுசிவம் சத்தியுடன் கூடி நிற்கும் நிலையைக் குறிப்பது. ஆன் - இடபம்,

60. விலங்கல் - மலை. மாலாய - மயக்கம் பொருந்திய, கைம்மா - களிறு. கார் உரிவை - கரிய தோல். அன்று - யானையைச் சங்காரஞ் செய்த காலம்,

61. அன்று - அருள் விளக்கம் பெறாது உலகில் நின்று ஆட்செய்த நிலை, இன்று - அருள் பெற்றுச் சிவபூத கணத்தில் ஒன்றாக நின்று அதனால் உலகை விட்டுத் திருக்கயிலையை அடையச் செல்லும் நிலை. என்பார்கள் - என்று கேட்பார்க்கு : இங்கு உடன் அணைந்த அன்பர் கூட்டம். ஏது - எத்தன்மையது.

62. பூதப்பால் - முன்னாளில் (பூதம் - சென்ற காலம்.) விசயன் - அருச்சுனன். ஏற்ற நாள் - போர் செய்த நாள். வல் வேடன் - வலிய வேடன் : சிவன்.

63. செங்கதிர் - சூரியன். பகலே - பகலிலே. திங்கள் நிலா எறிக்குங் கொல்லோ - சந்திரன் ஒளி வீசுமோ ? கடி உலவு - விளக்கம் பொருந்

நிலாவிலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போல்
உலாவி உழிதருமா கொல்லோ?—நிலாவிருந்த
செக்கரவ் வானமே ஒக்கும் திருமுடிக்கே
புக்கரவங் காலையே போன்று. 64

காலையே போன்றிலங்கும் மேனி; கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு;—மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை; மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு. 65

மிடற்றில் விடமுடையீர்! உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறே?—மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ?
பைத்தாடும் நும்மார்பில் பாம்பு. 66

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழருவி தூங்குதலால்.—ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு. 67

சிலம்படியாள் ஊடலைத் தான்தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேற் செவ்வரத்தஞ் சேர்த்தி—நலம்பெற்(று)

---

திய. சொல் முடிவு ஒன்றில்லாத சோதி - உணர்ந்து ஓதற்கு அரியவன்; சிவன். ஆல் - அசை.

64. நிலா இலங்கும் - கதிர் விளங்கும். நேடி - தேடி. உழி தருமா கொல்லோ - உலாவித் திரியுமோ? நிலா - சந்திரன். திருமுடிக்கு - திருமுடிக்குள்: உருபு மயக்கம். காலையே போன்று - காற்றேபோல.

65. காலையே போன்று - உதய காலம் போன்று. வேலை -:வேளை. தாங்கு - மேற்கொண்ட. வீங்கு - நிறைந்த- மிடறு - கண்டம். நாளின் பல கூறுகளாகவே இறைவனின் திருமேனிப் பகுதிகளைக் கண்டு போற்றித் துதித்தது இப்பாடல்.

66. விடங்கொண்ட வாறே - விஷங்கொண்டு அதனுல் கரிதாயின வாறே. மைத்தாம் - கருமையான. வண்ணம் - நிறம். கரிதாலோ - கரியதோ. பைத்து ஆடும் - படம் விரித்து ஆடுகின்ற.

67. மடமான் - இளமான். தாழ் அருவி - இங்குக் கங்கை. தூங்குதல் - இழிதல். மேய - பொருந்திய. சிலம்பு - வீரக்கழல். சிலம்பு ஆம் என்க. இச்செய்யுள் இறைவன் பேராற்றலும் பேரருளும் உடையவன் என்பதைக் காட்டுவது.

எதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான் ;
முதிரா மதியான் முடி. 68

முடிமேற் கொடுமதியான் முக்கணான் நல்ல
அடிமேற் கொடுமதியோம் கூற்றைப்—படிமேற்
குனியவல் மாமடிமை கொண்டாடப் பெற்றேம் ;
**இனியவலம் உண்டோ எமக்கு ?** 69

எமக்கிதுவோ பேராசை ? என்றுந் தவிரா(து) ;
எமக்கொருநாட் காட்டுதியோ ? எந்தாய் !—அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன புரிசடையாய் ! பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடும் இடம். 70

இடப்பால வானத்(து) எழுமதியை நீயோர்
மடப்பாவை தன்னருகே வைத்தால்—இடப்பாகம்
கொண்டாள் மலைப்பாவை கூறென்றுங் கண்டிலங்காண் ;
கண்டாயே முக்கண்ணாய் ! கண். 71

கண்டெந்தை ! என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன் ;—துண்டஞ்சேர்
விண்ணாளுந் திங்களாய் ! மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ! ஈ(து)என் கருத்து. 72

---

68. சிலம்பு அடியாள் - சிலம்பையணிந்த உமாதேவியார். ஊடல் - சிறு பிணக்கு. செவ்வரத்தம் - செம்பஞ்சு. செம்பஞ்சு ஊட்டிய அடிமேல் முடிவைத்து வணங்கிச் சடையைக் கோலம் செய்தான் என்க. முதிராமதி - இளம் பிறை.

69. கொடு மதி - வளைந்த பிறை. முக்கணான் - சிவபெருமான். கூற்று - இயமன். படி - பூமி. குனிய - வணங்க. அவலம் - பிறவித் துன்பம். உண்டோ - இங்கு இல்லை என்றபடி.

70. தவிராது - நீங்காது. காட்டுதியோ - காட்டுவாயோ. எந்தாய் - எம் தந்தையே ! பாய்ந்தாடுதல் - குதித்து ஆடுதல். ஏந்து எரி - பொங்கி மேலெரியும் தீ. எரிபாய்ந்து ஆடும் இடம் காட்டுதியோ என்க.

71. இடப்பால - இடம் அகன்ற. மடப்பாவை – கங்கை. உமை எனினுமாம். மலைப்பாவை - உமாதேவியார். கண் - ஆராய்ந்துபார். காண் : அசை. கண் - எண்ணுக எனினுமாம். கண்டாயே - தெரிவீர்.

72. எந்தை - என் தந்தையே. இறைஞ்சி - துதித்து. கைப்பணி - தொண்டு. அண்டம் - மேலுலகம். துண்டம் சேர் திங்கள் - பிறைச் சந்திரன். கண்ணாளா - அருள் செய்பவனே.

கருத்தினுல் நீகருதிற்(று) எல்லாம் உடனே
திருத்தலாஞ் சிக்கெனநான் சொன்னேன் ;—பருத்தரங்க
வெள்ளநீர் ஏற்ருன் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே ! எப்போதும் ஓது. 73

ஓத நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்தட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் ;—பேதையர்கள்
எண்ணு(து) இடும்பலியால் என்னே நிறைந்தவா !
கண்ணுர் கபாலக் கலம். 74

கலங்கு புனற்கங்கை [1]ஊடாட லாலும்
இலங்கு மதியியங்க லாலும்—நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேற் பாம்பியங்க லாலும்
விரிசடையாங் காணில் விசும்பு. 75

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடம் தேய்ப்ப—முசிந்தெங்கும்
எந்தாய் ! தழும்பேறி யேபாவம் பொல்லாவாம்
அந்தா மரைபோல் அடி. 76

அடிபேரிற் பாதாளம் பேரும் ; அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும் ;—கடகம்

---

பா—ம். 1 ஊடால லாலும்.

73. கருத்தினுல் கருதிற்று - பலகாலும் சிந்தித்துக் கருதியவை. திருத்தலாம் - திருந்தப் பெறலாம். சிக்கென - உறுதியாக. பரு - பெரிய. தரங்கம் - அலை. வெள்ள நீர் ஏற்ருன் - சிவன். அடிக்கமலம் - திருவடித் தாமரை.

74. ஓதம் - குளிர்ச்சி. கடல்கள் எத்தனையும் - கடல்கள் முழுமையும் : எழு கடல்களையும். உய்த்து அட்ட - கொண்டு பெய்யவும். ஏதும் - ஒரு சிறிதும். பேதையர்கள் - தாருக வனத்து இருடி பத்தினியர். கண் ஆர் - இடம் அகன்ற. கபாலக் கலம் - தலையோடு.

75. ஊடாடலாலும் - ஒடுங்கலாலும், மதி - சந்திரன். நலங் கொள் பரிசு உடையான் - நன்மை மிகுந்த இயல்புடைய இறைவன். காணில் - கருதுமிடத்து. பாம்பு - இராகு கேதுக்கள். விசும்பு -வானம்.

76. விசும்பில் விதி உடைய - விண்ணுலகத்தில் இருத்தற்குரிய நல் வினைகளைச் செய்த. பணிந்து - வணங்க. மகுடம் - கிரீடம். பாவம் - இங்கு இரக்கக் குறிப்பு. அடிபொல்லாவாம்- திருவடிகள் மிகச்சிவந்தன.

மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்:
அறிந்தாடும்: ஆற்று(து) அரங்கு. 77

அரங்கமாப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும்? ஏழாய்!—இரங்குமேல்
என்னுக வையான்றன் எவ்வுலகம் ஈந்தளியான்?
பன்னாள் இரந்தாற் பணிந்து. 78

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை ஏத்தத்—துணிந்தென்றும்
எந்தையார்க்(கு) ஆட்செய்யப் பெற்ற இதுகொலோ!
சிந்தையார்க்(கு) உள்ள செருக்கு. 79

செருக்கினல் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்
அரக்கனையும் முன்நின்(று) அடர்த்த;—திருத்தக்க
மாலயனுங் காணு(து) அரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால். 80

காலனையும் வென்றேம்; கடுநரகம் கைகழன்றேம்;
மேலே இருவினையும் வேரறுத்தோம்;—கோல
அரணர் அவிந்தழிய வெந்தீஅம்(பு) எய்தான்
சரணர விந்தங்கள் சார்ந்து. 81

---

77. அடிபேரில் - திருவடி பெயர்ந்தால். அடிகள் - சிவபெருமான். மாமுகடு - அண்டத்து உச்சி. கடகம் - கங்கணம். வான் - பெரிய. அரங்கு - ஆடும் இடம்.

78. ஏழாய் - ஏழை நெஞ்சே! வாளா இரங்குமோ - (நாம் மன மொழி மெய்களால் தொண்டு செய்யாது இருப்பின் இறைவன்) சும்மா இரங்குவாரோ (இரங்கார்); ஆனால் பன்னாள் இரப்பின் இரங்குவர்.

79. பணிந்தும் - மனம் வாக்குக்களால் பணிந்தும். படர் சடையான் - விரிந்த சடையையுடைய சிவன். போது - மலர். அணிந்தவர் - அடியார்கள். செருக்கு - பெருமிதம்; இறுமாப்பு; இது நன்மையின் பொருட்டு வருவது. சிந்தையார்க்கு உள்ள செருக்கு: இங்கு "இறுமாந் திருப்பன்கொலோ" என்ற அப்பர் தேவார அடி உன்னற்பாலது.

80. எத்தனையோ - இங்கு இருபது என்றபடி: அரக்கன் - இரா வணன். அடர்த்த - (வலிமையை) ஒழித்தன. காலன் - இயமன்.

81. கைகழன்றேம் - விட்டோம். மேலை இருவினை - பிறவிக்குக் காரணமாகிய வினை, அரணர் - முப்புரத்தவர், சரணர விந்தங்கள் - திருவடித் தாமரைகள், சார்தல் - முத்திப் பயனை அடைதல்,

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
பேர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியவாம்;—நேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிருஞ் சாயும் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின். 82

மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலும்? காண்பார்கட்(கு) என்றிரேல்—தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது. 83

நெடிதாய பொங்கெரியும் தண்மதியும் நேரே
கடிதாங் கடுஞ்சுடரும் போலும்; — கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும் வெந்தீ யினில்அழியக்
கண்டாலும் [1]முக்கண்ணாங் கண். 84

கண்ணாரக் கண்டும்என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் — விண்ணோன்!
எரியாடி! என்றென்றும் இன்புறுவன் கொல்லோ!
பெரியானைக் காணப் பெறின். 85

பெறினும் பிறிதியாதும் வேண்டேம்; நமக்கீ(து)
உறினும் உறுதொழியு மேனும் — சிறிதுணர்த்தி

---

82. சார்ந்தார் - அடிசார்ந்தவர்கள். பெற்றியவாம் - தன்மையுடையனவாம். நேர்ந்து உணரில் - ஆராய்ந்து தெளிந்தால். தாழ்சுடரோன் - மாலைச் சூரியன். சாயும் - தோற்கச் செய்யும். தழல் வண்ணன் - சிவன். மின் உரைக்கும் என்க. மின் - மின் போன்ற பெண். இச் செய்யுள் இறைவனைக் காதலித்த ஒரு பெண் கூற்றாக அமைந்தது.

83. இசைந்தால் - பொருந்திய (கோலம்). என்றிரேல் - என்று கேட்பீராகில். சடையானுக்கும் மாலுக்கும் முறையே பொற்குன்றும் நீலக் குன்றும் கொள்க. பொற்குன்றம் - மேருமலை; நீலமலை - இந்திரநீல பருப்பதம். இங்குக் கருதியது இறைவன் மாலொடு கூடிய கோலம்.

84. தண்மதி - குளிர்ந்த திங்கள். கடுஞ் சுடர் - வெப்பம் மிகுந்த சூரியன். விண்டார்கள் - பகைவர்கள்; திரிபுரர். இது நெற்றிக்கண் செயலைப் போற்றியது. பா - ம். 1. முக்கணாங்கண்.

85. எண்ணார எண்ணத்தால் - மனமார. விண்ணோன் - தேவர்களுக்குத் தேவனே. பெரியான் - தமக்கு மேல் பெரியவர் இல்லாதவன்; சிவன். அம்மையார் கயிலையில் இறைவனைக் காணச் செல்கின்றார் ஆதலின் "காணப் பெறின்" என்றார்.

மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் **பேயாய**
**நற்கணத்தில் ஒன்றாய நாம்.** 86

**நா**மாலை சூடியும் நம்ஈசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்(து)அன்பாய் — நாமோர்
அறிவினையே பற்றினால் எற்றே(து) அடுமே?
எறிவினையே என்னும் இருள். 87

இருளின் உருவென்கோ? மாமேகம் என்கோ?
மருளின் மணிநீலம் என்கோ? — அருள்எமக்கு;
நன்றுடையாய்! செஞ்சடைமேல் நக்கிலங்கு வெண்மதியம்
ஒன்றுடையாய்! கண்டத்(து) ஒளி. 88

ஒளிவிலி வன்மதனை ஒண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள [1]சிந்தையினில் சேர்வாய்! — ஒளிநஞ்சம்
உண்டவாய் அஃதிருப்ப உன்னுடைய கண்டமிருள்
கொண்டவா(று) என்? இதனைக் கூறு. 89

கூறெமக்கி(து); எந்தாய்! குளிர்சடையை மீதழித்திட்(டு)
ஏற மிகப்பெருகின் என்செய்தி? — சீறி
விழித்தாரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்தோடுங் கங்கைத் திரை. 90

---

பா—ம். 1. சிந்தனையிற்.

86. பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம் - இது தாம் வேண்டிப் பெற்ற பேய்ப்பூதகண வடிவத்தில் இறுமாந்து நின்று கூறியதாகும். ஈது - நினைத்த இப்பேய்நிலை, சிறிதுணர்த்தல் - பக்குவத்திற்கும் வினை நுகர்ச்சிக்கும் ஏற்றபடி உணர்த்தல்,

87. நாமாலை சூடி - நாவினால் தோத்திரப் பாடல்களைப் பாடி. அறிவினையே - பேரறிவாகிய சிவத்தினையே. எறிவினையே என்னும் இருள் - துன்பமாகிய இருள். எற்று ஏது அடும் - எவ்வாறு வருத்தும் (ஒரு வாற்றாலும் வருந்தாது.)

88. மாமேகம் - கருமேகம். மருள் இல் - குற்றம் அற்ற. நக்கு இலங்கு - மிக விளங்குகின்ற. ஒளி - கறையின் ஒளி. என்கோ - இஃது ஐயப்பாட்டில் கூறுவது. இச்செய்யுள் நீலகண்டத்தைப் போற்றியது.

89. ஒளி விலி - ஒளி பொருந்திய வில்லையுடைய. வன் மதன் - வலிய மன்மதனை. தெளிவு - சிவனே முதல்வர் என்ற தெளிவு.

90. என் செய்தி - என்ன செய்வாய். திரை - அலை. இஃது இறைவன் சடையில் கங்கையைத் தாங்கியதைப் புகழ்ந்தது ஆகும்.

திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்
உரைமருவி யாமுணர்ந்தோம் கண்டீர் ;—தெரிமினோ
இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே;
எம்மைப் புறனுரைப்ப(து) என்? 91

என்னை உடையானும் ஏகமாய் நின்றானும்
தன்னை அறியாத தன்மையனும் — பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்(கு)
அருளாக வைத்த அவன். 92

அவன்கண்டாய் வானோர் பிரானாவான்; என்றும்
அவன்கண்டாய் அம்பவள வண்ணன்; — அவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான்; மற்றவன்பால் நல்நெஞ்சே!
மெய்த்தமர்ந்(து)அன் பாய்நீ விரும்பு. 93

விரும்பினால் நீபிரிய கில்லாயோ? வேறா
இருப்பிடமற்(று) இல்லையோ? என்னோ?—பொருப்பன்மகள்
மஞ்சுபோல் மால்விடையாய்! நிற்பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ? சொல்லாய் அவள். 94

அவளோர் குலமங்கை பாகத் தகலாள்;
இவளோர் சலமகளும் ஈதே;—தவளநீ(று)

---

91. திரை - இங்குக் கங்கை. உரை மருவி - புகழ்த்து பாடி. அம்மை - முத்தி நிலை, அமைந்தோம் - ஒருப்பட்டு நின்றோம், புறன் உரைப்பது - புறங்கூறல்: புறச்சமயம் பற்றி இகழ்ந்துரைக்கும் மொழி.

92. என்னையுடையான் - என்னை அடிமையாக உடையவன், ஏகமாய் நின்றான் - தானே தனிமுதலாய் நின்றான். ஏகன் - சிவன். அறியாத தன்மையான் - இப்படியன் இந்நிறத்தன் என்றெழுதிக் காட்டொணாத தன்மையன். தூ - தூய்மையான. வைத்தனைய - வைத்தாற் போன்ற.

93. அவன்: இஃது அகரச் சுட்டு; அகரவுயிர்போல் நின்றவன், மைத்து அமர்ந்த - கருமை நிறம் பொருந்திய, மெய்த்து - மெய்யாகிய. அன்பாய் - அன்பால்.

94. பிரியகில்லாயோ - பிரியமுடியாது இருக்கின்றாயோ? பொருப்பன் - இமவான். மஞ்சு - மேகம். மால் விடை - பெரிய இடபம். திருமாலாகிய இடபமுமாம். சொல்லாய் - சொல்லுவாயாக.

95. அவள் - உமாதேவியார், சலமகள் - கங்கை. ஈதே - சடையினின்று நீங்காள் என்றபடி. தவளம் - வெண்மை. பிரிந்தறியீர் - பிரியமாட்டீர், அன்பு அணியார் - நெருங்கிய அன்புடையவர். ஆர் - யார்.

என்பணிவீர் ! என்றும் பிரிந்தறியீர் ; ஈங்கிவருள்
அன்பணியார் சொல்லுமின்;இங்(கு) ஆர் ? 95

ஆர்வல்லார் காண? அரன்அவனை அன்பென்னும்
போர்வை அதனாலே போர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் [1]மறைத்து. 96

மறைத்துலகம் ஏழினிலும் வைத்தாயோ? அன்றேல்
உறைப்போடும் உன்கைக்கொண் டாயோ?—நிறைத்திட்(டு)
உளைந்தெழுந்து நீ எரிப்ப மூவுலகும் உள்புக்(கு)
அளைந்தெழுந்த செந்தீ அழல். 97

அழலாட அங்கை சிவந்ததோ? அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ?— கழலாடப்
பேயாடு கானில் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு. 98

செப்பேந்(து) இளமுலையாள் காணவோ? தீப்படுகாட்(டு)
அப்பேய்க் கணமவைதாங் காணவோ?-செப்பெனக்கொன்(று)
ஆகத்தான் அங்காந்(து) அனலுமிழும் ஐவாய
நாகத்தாய் ! ஆடுன் நடம் 99

நடக்கிற் படிநடுங்கும்; நோக்கில் திசைவேம் ;
இடிக்கில் உலகனைத்தும் ஏங்கும்;—அடுக்கல்

---

பா—ம். 1 மதித்து

96. ஆர் - எம்போல்வார் அன்றி வேறு யாவர். தாயத்தால் - உரிமையால். தாயம் - பிறப்புரிமை. மாயம் - பிறர் அறியாமல் செய்யும் உபாயம் என்றபடி.

97. உலகம் ஏழ் - கீழ்மேலுள்ள ஏழு உலகம். உறைப்பு-வலிமை, உளைந்து - சிறி, மூவுலகு - சுவர்க்கம், பூமி, பாதலம் என்ற மூன்றுலகு. அழல் - தீ.

98. அங்கை - திருக்கை. கழல் ஆட - வீரக் கழல் ஆட. கான் - காடு. அனல் - தீ.

99. செப்பு ஏந்து இள முலையாள் - உமாதேவியார். செப்பு - கிண்ணம். ஐவாய நாகம் - ஐந்து தலைகளையுடைய பாம்பு. அனல் உமிழும் - தீப்போன்ற விஷத்தைக் கக்கும்.

பொருமேறோ? ஆனேறோ? பொன்னொப்பாய்! நின்னே(று)
உருமேறோ? ஒன்று உரை. 100

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினால் காரைக்காற் பேய்சொற்—பரவுவார்
ஆராத அன்பினோ(டு) அண்ணலைச்சென் றேத்துவார்;
பேராத காதல் பிறந்து. 101

திருச்சிற்றம்பலம்

**அம்மையார் திருமுறை**

**முற்றிற்று**

---

100. படி : உலகம். வேம் - வெந்துபோகும். அடுக்கல் பொரும் ஏறு - சிங்கம். அடுக்கல் - மலை. ஆன் ஏறு - இடபம். நின் ஏறு - உன் வாகனம். உரும் ஏறு - இடி.

101. உரையினால் - அன்பால், வெண்பா மாலை அந்தாதி - வெண்பாக்களால் ஆகிய மாலையை அந்தாதித் தொடையாக, கரைவினால் - கசிந்து, காரைக்கால் பேய் - காரைக்காலம்மையார், சொல் பரவுவார் - சொல்லியவே சொல்லி ஏத்துவார், பேராத - நீங்காத, காதல் - அன்பின் மேனிலை.

## • Sri Karaikkal Ammaiyar Memorial Endowment At Lalgudi. Rs. 15,000

This endowment is founded by His Holiness Srilasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal in revered memory of **Karaikkal Ammaiyar** one of the sixty three Nayanmars who was named Punithavathiyar by her parents, who, from her earliest years, developed instinctively the love of God and service to the Devotees of Siva, whose devotion to Lord Siva in general and her husband in particular was so great that she wrought (to the amazement of her husband) a miracle by bringing Mango fruits on a certain occasion and served them to her husband, who composing "Arbutha Thiruvanthathi" left for Kailas where Lord Siva called out to her "**Mother**" and granted her prayer that she should never forget Him and that she should ever dwell under His Dancing Foot ever singing His Praise and who, thenceforth, becoming known as the "**Mother of Karaikkal**" went to Thiruvalankadu, sang the "Mootha Thirupathigam" and witnessed the Anantha Thandava of Lord Siva. It is in memory of this illustrious scholar and saint that this endowment is founded. This endowment shall be known as "Sri Karaikkal Ammaiyar Memorial endowment at Lalgudi".

2, This endowment shall consist of Government Securities to the value of Rs 15,000 (Rupees Fifteen Thousand only) invested in 3% Conversion Loan of 1946 (Stock Certificate No, MS. 2359 for Rs. 5.000, MS. 2425 for Rs. 5000, MS 2204 for Rs. 2000, MS. 2426 for Rs 2000 and MS. 2428 for Rs 1000 Total Rs. 15.000). The administration of the fund shall vest in the Donor and his Successors in interest.

3. From out of the accrued interest on the endowed capital a sum of Rs. 405 (Rupees Four Hundred and Five only) shall be set apart each year granting stipends at Rs. 45 (Repees Forty five only) each per annum to nine deserving girls studying in IV, V and VI Form in the Girls' High School, Lalgudi and the balance shall be utilised for meeting the incidental expenses. The number and amount of stipends may vary according to the amount of interest received from the capital endowed.

4. The terms and conditions for the award of stipends are as follows :—

(i) Stipends shall be granted to poor, intelligent and deserving girl students studying in the IV, V, and VI Forms of the Girls' High School, Lalgudi irrespective of their religion, caste or creed.

(ii) Such girl students shall recite "Kandar Kalivenba" as a necessary qualification for the award of the stipend.

(iii) Girls competing for the stipends shall every year send their application to the President of the Lalgudi Girls' Education Society who, in consultation with a committee consisting of (1) himself as the President of the committee (2) the Head Mistress of the Girls' High School, Lalgudi (3) Correspondent of the Girls' High School, Lalgudi and (4) President of the Panchayat Board, Lalgudi, shall select girls for awarding stipends.

(iv) Nine girls shall be selected at the first instance three in each of the IV, V, and VI Forms and in succeeding years fresh awards for three girls shall be made in Form IV.

(v). The stipends shall be continued for the same pupils from year to year subject to their proficiency, good conduct and promotion to a higher form.

(vi). If the stipend holder does not get promotion to a higher form she shall not be eligible for the stipend. Such lapsed stipend may be awarded to any other deserving girl on conditions stipulated herein above and this fact shall at once be reported to the Donor and his Successors in interest.

5. The names of pupils who shall be awarded the stipends—renewals and fresh awards—for each year shall be intimated each year by the President of the Lalgudi Girls' Education Society, Lalgudi about the 15th July each year to the Donor and his Successors-in-interest and the amount of Rs. 405 (Rupees Four Hundred and Five only) shall be remitted to him. The President of the Lalgudi Girls' Education Society shall disburse the amount each month to the girls concerned through the Headmistress of the Lalgudi Girls' High School and forward their acquittance to the Donor or his Successors-in-interest every month.

6. *(a)* If the stipend holder shall discontinue her studies in the middle of the term, the fact should be intimated to tho Donor or his Successors-in-interest and the amount thus left unpaid may be awarded to another girl for the remaining part of the year only at the discretion of the President of the Lalgudi Girls' Education Society on conditions stipulated in paragraph 4 supra and this fact shall also be reported to the Donor or his Successors-in-interest

(b) If in any year the President of the Lalgudi Girls' Education Society does not make the selection of pupils for stipends on conditions stipulated in paragraph 4 and 5 supra the Donor and his Successors-in-interest shall be at liberty to utilise the amount for awarding stipends to Girls studying in any other Girls' High School as the Donor and his Successors-in-interest deem fit.

7. The endowment shall not be diverted to any other purpose than the one stipulated in this deed of endowment.

Dated:
30—8—51 **(Sd.) KASIVASI ARULNANDI TAMBIRAN**

**Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 31-8-1951 as No. 47 of 1951 of Book No, 4 Volume No. 44 pages 21-24.**

உ

சிவசிவ

## வட திருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையார் நினைவு அன்னம் பாலிப்பு முதற் பொருள் ரூ. 5000

தனதத்தர் எனும் காரைக்கால் வணிகர் செய்தவத்தால் அவதரித்தவரும் புனிதவதியார் என்ற இயற்பெயரினரும், பிறந்து மொழி பயின்றபின் எல்லாம் விடையவர்பால் துன்னிய அன்புடன் திகழ்ந்தவரும், நாகை நிதிபதி மைந்தன் பரம தத்தனை மணம் புரிந்தவரும், ஒருநாள் பரமதத்தன் அனுப்பிய மாங்கனிகள் இரண்டில் ஒன்றை அடியார்க்குப் படைத்து மற்றொன்றைப் பின் கணவர்க்குப் படைக்க அக்கனியில் சுவை மிகுதியால் பிறிதொன்று கேட்க ஈசன் அருளால் அதிமதுரக் கனியொன்று பெற, கணவன் ஐயுற, அவ்வையத்தை நீக்கப் பின்னும் மாங்கனியொன்று அருளால் வந்தெய்தப்பெற்றவரும், கணவன் அஞ்சி அகன்றமையின் தாங்கிய வனப்பு நீங்கி எற்புடம்பேயாக வானமும் மண்ணும் வணங்குபேய் வடிவம்

பெற்றவரும், அப்பொழுதே **அற்புதத் திருவந்தாதியும். இரட்டை மணி மாலையும்** அருளிக் கயிலை நோக்கித் தலையினால் நடந்து சென்றவரும், சிவபெருமான் 'வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை' என்று அருளப் பெற்றவரும், இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் "பிறவாமை வேண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க" என்று வரம் வேண்டியவரும், அங்ஙனமே திருவாலங்காட்டுக்குச் சென்று **மூத்த திருப்பதிகம்** அருளி அண்டமுற நிமிர்ந்தாடும் அமலன் சேவடிக்கீழ் என்றும் இருக்கின்றவருமாகிய காரைக்கால் அம்மையாரின் தொண்டுகளைப் போற்றி உலகு உய்யும் வண்ணம் இந்நிதி திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது 'வட திருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையார் நினைவு அன்னம் பாலிப்பு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபா ஐயாயிரம்) இது ஆண்டொன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. 3/– வீதம் வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப்பெற்றுள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரம் எண் சி. ஏ. 141216 — ரூ. 5000. இந்நிதி நம்மாலும் நமக்குப்பின் உரிமை உள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப் பெறும்.

3. இம் மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக்கொண்டு, தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாயதும், கூத்தப் பெருமான் நடஞ்செய்யும் ஐம்பெரு மன்றங்களுள் இரத்தின சபை எனப்பெறுவதும், இறைவன் ஊர்த்துவ தாண்டவம் புரிவதும், அம்மையார் தலையாலே நடந்த தலம் என்று சம்பந்தர் மிதித்தற்கு அஞ்சியதும், சொன்ன சொல் பிழையாத வேளாளர் வாழும் பழையனூரை அடுத்துள்ளதுமாகிய திருவாலங்காட்டில், ஆண்டுதோறும், பங்குனிச் சுவாதியில் அந்தணர் அருந்தவர் ஏழைகட்கு அன்னம் பாலிப்பு நடைபெறும்.

4. ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும், கால விலைக்கு ஏற்பவும், தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் நடத்தப்பெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. முதற்பொருள் அரசினரால் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பெறும்.

*திருப்பனந்தாள்*
*13—2—1955*

**(Sd.) KASIVASI ARULNANDI TAMBIRAN**

---

**Registered at Tiruvadamarudur Sub-Registrar's office on 17-2-1955, as No. 21 of 1955, Book 4 volume 45, pages 247 & 248.**

---

**வாழ்த்து**

*வான்முகில் வழாது பெய்க ;*
*மலிவளம் சுரக்க ; மன்னன்*
*கோன்முறை அரசு செய்க ;*
*குறைவிலாது உயிர்கள் வாழ்க ;*
*நான்மறை அறங்கள் ஓங்க ;*
*நற்றவம் வேள்வி மல்க ;*
*மேன்மைகொள் சைவ நீதி*
*விளங்குக உலக மெல்லாம்.*

—*கந்தபுராணம்*

CONNEMARA PUBLIC LIBRARY 4 APR 1957 MADRAS

---

*இ[illegible] அச்சகம், திருச்சிராப்பள்ளி.*